பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மாசி 17 | புதன்கிழமை | 01.03.2023 | கதிர் 112

### இது ரகசியம் அல்ல!

எனது செய்தியாளர் நேற்று காலையில் வட்அப்பில் ஒரு தகவல் அனுப்பினார். அது ஜேவிபியின் உத்தியோகபூர்வ தமிழ் முகப்புத்தக (பேஸ்புக்) பக்கத்தின் ஸ்கிரீன் ஷொட். அதில் காலைக் கதிர் பத்திகையின் செய்தி மீது பொய்ச் செய்தி என்று முத்திரை குத்தப்பட்டிருந்தது. அத்தோடு திரித்துச் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள் என்கிற விளக்கமும் இருந்தது.

“எங்கள் பத்திரிகைச் செய்தியை மறுத்திருக்கிறார்களே?” என்று ☞ 2

# மக்களை அணி திரட்டி அரசை மிரட்டமுடியாது

## எதிர்க் கட்சிகளுக்கு ரணில் எச்சரிக்கை



**நாட்டினதும் மக்களினதும் நலனைக் கருத்தில்கொண்டு தற்போதைய அரசு சீரான பாதையில் பயணிக்கின்றது. இதைப் குழப்பியடிக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர். மக்களை அணிதிரட்டிப் போராட்டம் நடத்துவதன் மூலம் அரசை மிரட்ட முடியாது என்று எதிர்க்கட்சியினரிடம் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

**இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** ☞ 2

## மூன்று வாரத்துக்குள் தேர்தலை நடத்துங்கள்

### ஆணைக்குழுவிடம் ஜேவிபி வலியுறுத்து

மூன்று வாரத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற வகையில் வாக்களிப்புத் திகதியை அறிவிக்கும்படி தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஜேவிபி வலியுறுத்தியுள்ளது.

ஆணைக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களைச் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசிய பின்னர் இந்தத் தகவலை ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்க செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## ஜனாதிபதி உடன் நிறுத்தவேண்டும்

### வாசு வலியுறுத்து



ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தை சர்வாதிகாரமான முறையில் அடக்குவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார் இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார. ☞ 2

## நாடாளுமன்றை உடன் கூட்டும்படி சஜித் சபாநாயகரிடம் வலியுறுத்து



2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை உடனடியாக விடுவிப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டும்படி ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளார்.

சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழு செவ்வாய்க்கிழமை காலை ☞ 2

### 13 ஐ முழுமையாக அமுல்படுத்திவிட்டு பேச வருமாறு

## ஒரே குரலில் வலியுறுத்துக மனோ கணேசன் ‘அட்வைஸ்’

### வடக்கு, கிழக்கு தமிழ்த் தலைவர்களுக்குத் தெரிவித்தார்




வடக்கு, கிழக்கில் வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் ஒரே குரலில்மக்களுக்கானஉரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டும்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற மாகாணசபைஉள்ளிட்டஅதிகாரங்கள் அனைத்தையும் முதலில் முழுமையாக அமுல்படுத்திவிட்டு தேசிய பிரச்சினைக்கு ☞ 2

## சமஷ்டியைக் கேட்க முன் விக்னேஸ்வரன் தன் நிலைப்பாட்டில் தெளிவாகவேண்டும்

### இப்படிச் சொல்கிறார் மனோ கணேசன்



தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் சமஷ்டி தொடர்பில் கரிசனை கொள்வதற்கு முன்னர் தனது அரசியல் நிலைப்பாடுகளில் தொய்வில்லாமலும், தெளிவாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தினார்.

தனியார் வானொலி ஒன்றின் நேர்காணல் நிகழ்ச்சியில் கருத்து வெளியிடும் போதே மனோ கணேசன் இதனைக் கூறினார். ☞ 8

## இந்திய மீன்பிடி படகுகள் திருமலையில் விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 01

திருகோணமலைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தமைக்காகப் பறிமுதல் செய்யப்பட்ட தமிழ்நாடு விசைப் படகுகள் இரண்டு திருகோணமலை நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டு இலங்கை கடற்பரப்பிற்குள் ஊடுருவிய 3 படகுகள் தொட்பான வழக்கு திருகோணமலை நீதிமன்றில் இடம்பெற்ற நிலையில் நேற்றைய தினம் இரு படகுகளை விடுவித்து திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. ☞ 8

### யாழ். மாநகர சபை வாக்கெடுப்பில்

## கட்சி உத்தரவுகளை மீறிய உறுப்பினர் மீது நடவடிக்கை

### புளொட், ரெலோ அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ் மாநகர சபையின் வரவு செலவுத் திட்ட வாக்களிப்பின் போது கட்சி முடிவை மீறி செயற்பட்ட ரெலோ மற்றும் புளொட் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு பெரும் எதிர்பார்புக்கள் பரபரப்புகளுக்கு மத்தியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த வரவு – செலவுத் திட்ட வாக்களிப்பின்போது ஆதரவளிப்பது எதிர்ப்பது புறக்கணிப்பது என கட்சிகள் பலவும் ☞ 8

## இன்றும் நாளையும் கறுப்புப் போராட்டம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு



தேர்தலை ஒத்தி வைத்த அடக்குமுறைக்கு எதிராக நாடு முழுவதும் ஆசிரியர்கள் இன்றும் நாளையும் கறுப்புப் போராட்டம் நடத்துகின்றனர். கறுப்பு ஆடைகள் அல்லது கறுப்புப் பட்டிகளுடன் அவர்கள் பாடசாலைக்கு வருவார்கள் என்று இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் யோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களால் இன்று முன்னெடுக்கப்படும் ☞ 8

## வங்கிக் கட்டமைப்பு செயலிழக்கவில்லை



நாடு முழுவதும் இன்று தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ள நிலையிலும், தங்கள் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கத் தயாராக இருப்பதாக மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். ☞ 8

## சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை கொண்டு செல்கிறார் ஜனாதிபதி

### சித்தார்த்தன் இப்படிக் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)



ஜனாதிபதி சர்வாதிகாரமான முறையில் தனது செயற்பாடுகளை கொண்டு செல்வது நாட்டில் இன்னுமின்னும் குழப்பங்களையே ஏற்படுத்தும் என எச்சரித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் சர்வாதிகார ஆட்சிக்குள் நாட்டை கொண்டு செல்ல ஜனாதிபதி முயற்சி எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ். கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது – அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

## சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவது குறித்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வழக்காடியமை குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு சட்டத்தரணிகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெப்ரவரி 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையாற்றினார். உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களை நடத்துவது குறித்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பில் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் கேள்வியும் எழுப்பியிருந்தார். அது ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துன் நெத்தி வங்கிய நேர்காணல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட செய்தி. காலைக்கதிர் நேற்றைய காலைப் பதிப்பில் அதனை தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஜேவிபியும் எதிர்க்கிறது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப் பட்டிருந்தது. கட்சியின் தலைவர் தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை ஜேவிபி எதிர்க்காது என்று கூறியிருந்தார். ஆனால் இப்போது ஜேவிபியின் நிலைப்பாடு மாறியிருக்கிறது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜேவிபியின் மறுப்பில் செய்தி திரிக்கப்பட்டிருக்கிறது என்று மொட்டையாகச் சொல்லப்பட்டிருந்ததே தவிர, அதுபற்றிய விவரம் எதுவும் இல்லை. போதாதற்கு தாங்கள் ஏதோ நியாயவான்கள் போன்று அந்தச் செய்திக்குரிய மூல நேர்காணல் இணைப்பையும் அவர்கள் வழங்கியிருந்தார்கள்.

அதைப் பார்த்தமும் எனது செய்தியாளர் ஏதும் மொழிபெயர்ப்புத் தவறிழைத்திருப்பாரோ என்ற சந்தேகத்தில் நன்கு சிங்களம் தெரிந்த இருவருக்கு அந்த நேர்காணல் லிங்கை அனுப்பி அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று கேட்டேன்.

அவர்கள் அனுப்பிய மொழிபெயர்ப்பை அப்படியே இங்கு தருகின்றேன் பாருங்கள்.

"13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக 'தெரண 360' நிகழ்ச்சியில் நேர்கண்டவர் எழுப்பிய கேள்விக்கு ஜே.வி.பியின் முக்கியஸ்தர் சுனில் ஹந்துன்நெத்தி வழங்கிய பதில்...

கேள்வி:- அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் தற்போது மாற்றம் வந்துள்ளதா?

பதில்:- இல்லை... இல்லை.. அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இணக்கம் இல்லை. நாங்கள் அன்று இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடியோடு எதிர்த்தோம். எனவே, உங்கள் கேள்விக்கு நான் புதிய விளக்கம் வழங்கத் தேவையில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தை ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முழுமையாக எதிர்க்கின்றது என நான் (சுனில் ஹந்துன்நெத்தி) சொல்வதாகக் கூறுங்கள்.

மாகாண சபை அறிமுகப்படுத்தப்படும் போது அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் இருந்தது. இப்போது 13உம் நடைமுறையில் இல்லை; மாகாண சபையும் நடைமுறையில் இல்லை - என்றார்.

சுனில் ஹந்துன்நெத்தியை நேர்கண்டவர் திரும்பத் திரும்ப 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஜே.வி.பி. எதிர்ப்பா? என்று மூன்று தடவைகளுக்கு மேல் கேட்ட கேள்விகளுக்கு, சுனில் ஹந்துன்நெத்தி ஆம் என்றே திட்டவட்டமாகப் பதிலளித்தார்.

குறிப்பு:- 'அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி எதிர்ப்பு' என்ற தலைப்பிலேயே ஜே.வி.பியின் முக்கியஸ்தர் சுனில் ஹந்துன்நெத்தி தனது செவ்வியை காணொளி வடிவில் தனது உத்தியோகபூர்வ 'பேஸ்புக்'கில் பதிவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது"

இதுதான் அந்த மொழி பெயர்ப்பின் முழு வடிவம். எனது செய்தியாளர் எழுதியதிலும் பார்க்க மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஜேவிபி எதிர்க்கிறது என்பதை ஹந்துன்நெத்தி வெளிப்படுத்தியிருக்கிறார். அதைத்தான் காலைக்கதிர் செய்தியாக வெளியிட்டிருந்தது. இதில் என்ன திரிபை கண்டுவிட்டது ஜேவிபி என்று தெரியவில்லை.

கட்சியிடம் இருந்து எமக்கு உத்தியோகபூர்வமான மறுப்பும் எதுவும் வரவில்லை. கட்சியின் சிங்கள, ஆங்கில முகப்புத்தகப் பக்கங்களிலும் இந்த பொய்ச் செய்தி நாடகம் இல்லை. ஒன்றில் ஜேவிபியின் தமிழ் முகப்புத்தகத்தை முகாமை செய்பவர் அரைகுறைத் தமிழ் தெரிந்த தற்குறியாக இருக்கவேண்டும் அல்லது சிங்களம் தெரியாத வேதாளமாக இருக்கவேண்டும். இத்தகைய ஆட்களை நம்பி தமிழ் மக்களிடையே கட்சியை வளர்த்தெடுத்துவிடமுடியும் என்று நம்பி வந்து யாழ்ப்பாணத்தில் இருக்கும் சந்திரசேகரத்திற்கு இது சமர்ப்பணம்.

*********

யாழ். மாநகர சபையில் நேற்று ஆனல்ட்டின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப் பட்ட உடனே அந்த மகிழ்ச்சியை வெடிகொளுத்தி கொண்டாடி ஆர்ப்பரித்திருக்கிறார்கள் சிலர். அதை யார் யாருக்காகச் செய்திருப்பார்கள் என்பதை நான் சொல்லி மக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆனாலும் இதற்கு முன்னர் ஆனல்ட் தோல்வியடைந்தபோதும் மணிவண்ணன் தோல்வியடைந்தபோதும் யாரும் இப்படி வெடிகொளுத்தி ஆரவாரித்ததில்லை. மணிவண்ணின் தோல்விக்குப் பின்னர் ஆனல்ட் வென்று மீண்டும் தோற்றபோது இந்த ஆரவாரங்கள் எல்லாம் வெளிப்படுகின்றன. என்ன செய்வது குறைந்தபட்ச அரசியல் நாகரிகத்தைக் கூடப் பேண முடியாத சிறுமூளைக்காரர்களை மக்களாகிய நீங்கள் பதவியில் அமர்த்தினால் இனி எல்லாமும் இப்படித்தான் நடக்கும்.

- இடிமின்னல் -

## மக்களை அணி திரட்டி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– தேர்தலைப் பிற்போடுகின்ற சூழ்ச்சிக்கு எதிரான எதிர்ப்பு - என்ற தொனிப்பொருளில் கொழும்பில் அரசுக்கு எதிராக ஜே.வி.பி. தலையிலான தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்த போராட்டம் தொடர்பிலும், அந்தத் போராட்டத்தை அடக்கப் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்தும் கருத்து வெளியிடும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி ஆகிய எதிர்க்கட்சிகள் தங்களின் பலத்தைப் போட்டியிட்டுக் காட்டுவதற்காக மக்களைப் பலிக்கடாவாக்கப் பார்க்கின்றன.

நீதிமன்றம் ஊடாகத் தடை உத்தரவு பெறப்பட்ட பகுதிகளுக்குள் ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே.வி.பியினர் அத்துமீறிப் பிரவேசித்த போதே அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

நீதிமன்றத்தின் உத்தரவைக் கூட மீறி நடக்கும் ஜே.வி.பியினர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி எப்படி நாட்டை மீளக்கட்டியெழுப்பப் போகின்றனர்?

ஜே.வி.பியினரின் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் அவர்களின் வீர வசனங்களைக் கேட்பதற்கு மக்கள் அணிதிரள்வது வழமை. ஆனால், தேர்தல் பெறுபேறுகளின் போது ஜே.வி.பியினரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதும் வழமை - என்றார்.

## மூன்று வாரத்துக்குள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் ஆணைக் குழுவுடன் கலந்துரையாடினோம். மார்ச் 9ஆம் திகதி இடம்பெறவிருந்த வாக்கெடுப்பு பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதியை 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அறிவிக்கவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் திகதி பிற்போடப்படுமாயின் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் இருந்து 21 நாட்களுக்குள் அதாவது மூன்று வார காலத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டும், ஆகவே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்தும் திகதியை இந்த 21 நாட்களுக்குள் நிர்ணயிக்குமாறு ஆணைக்குழுவிடம் வலியுறுத்தினோம்.

தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் திட்டமிட்ட வகையில் இடையூறு விளைவித்துள்ளது. அதற்கெதிராக தேர்தல்கள் ஆணைக்குழு அரசமைப்பினால் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை உச்சபட்சமாக பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தினோம் - என்றார்.

பேரணியில் என்ன நடந்தது?

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போராட்டம் அதன் மீது பொலிஸார் நடத்தி தாக்குதல் என்பன தொடர்பிலும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்த பகுதிகளுக்கு செலவதற்காக நாம் ஒன்றுகூடவில்லை. விகாரமாதேவி பூங்காவில் இருந்து கோட்டை தொடருந்து நிலையம் வரை செல்வதற்கே முயன்றோம். நீதிமன்றத் தடையுத்தரவில் கோட்டை தொடருந்து நிலையம் உள்வாங்கப்படவில்லை, அமைதியான போராட்டத்தை பொலிஸாரே அமைதியற்ற போராட்டமாக மாற்றியமைத்தார்கள்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை இந்த ஆட்சி முடக்கும்போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபடுவது குற்றமா? இதனை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

போராட்டத்தில் கலந்துக் கொண்டவர்கள் மீது பொலிஸார் மிலேச்சத்தனமான தாக்கினார்கள். அமைதியான போராட்டம் அமைதியற்ற போராட்டமாக மாற்றியமைக்கப்பட்டதால் எமது கட்சியின் வேட்பாளர் நிமல் அமரசிறி உயிரிழந்துள்ளார், இதற்கு இந்த ஆட்சிதான் பொறுப்புக் கூறவேண்டும். - இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி உடன் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திற்கு எதிரான தொழிற்சங்க போராட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் அறிவித்தார்.

இடதுசாரி ஜனநாயக முன்னணி காரியாலயத்தில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியினர் கடந்த 26 ஆம் திகதி கொழும்பில் நடத்திய போராட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர்தாரை பிரயோகித்தமை வன்மையாக கண்டிக்கத்தக்கது.

பொலிஸாரின் வன்முறையான செயற்பாட்டினால் ஒருவர் உயிரிழந்துள்ளார், இதற்கு ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும்.

ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தை சர்வாதிகாரமான முறையில் அடக்குவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன் நிறுத்தவேண்டும்.

விக்கிரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது, ஆகவே அவரின் செயற்பாடுகளை நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள போவதில்லை. – என்றார்.

## ஜனாதிபதி உடன் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்திலுள்ள சபாநாயகர் அலுவலகத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்து கலந்துரையாடியது.

தேர்தலுக்கு பணம் விடுவிக்கப்படாதது குறித்து நிதியமைச்சின் செயலாளரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து கேள்வி எழுப்புமாறும் இந்தச் சந்திப்பில் எதிர்க் கட்சியினர் வலியுறுத்தினர்.

தேர்தலை நடத்துமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். எதிர்காலத்தில் இது மேலும் மோசமடையலாம். அதனால் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி இது பற்றி ஆராயவேண்டும் என்று சஜித் அங்கு வலியுறுத்தினார்.

அத்துடன் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட நிதிசார் தீர்மானம் நிறைவேற்று அதிகாரத்தின் (ஜனாதிபதி) மூலம் நசுக்கப்பட்டால் நாடாளுமன்றம் என்ற ஒன்று ஏன் என கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், தேர்தல் ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களும் ஏகமனதாக தேர்தலை வர்த்தமானி மூலம் அறிவித்த பின்னரும் அதனை நடததவிடமாட்டேன் என்று அடம்பிடிப்பதன் மூலம் சர்வாதிகாரத்திற்கான பயணத்திற்கே ஜனாதிபதி தயாராகி வருகிறார் என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை குறைத்து மதிப்பிட யாருக்கும் உரிமை இல்லை என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அங்கு தெரிவித்தார்.

மாகாண சபைகள் தற்போது செயலிழந்துள்ளன. அதன் அதிகாரம் ஜனாதிபதியின் பிரதிநிதியின் கைகளில் உள்ளது. எதிர்காலத்தில், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களும் ஜனாதிபதியின் பிரதிநிதியின் கைகளுக்கு மாறும். அதன் பின்னர் மக்கள் பிரதிநிதிகள் ஜனாதிபதியால் தடுப்புக் காவலில் வைக்கப்படுவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டினார்.

இந்த விடயங்கள் குறித்து புதன்கிழமை கூட்டப்படும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம் என்று சபாநாயகர் எதிர்க்கட்சிக் குழுவினருக்குப் பதிலளித்தார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு நிதியமைச்சின் செயலாளரை அழைக்குமாறு இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

## ஒரே குரலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை மேசைக்கு வாருங்கள், நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம் என்ற விடயத்தை ஒரே குரலில் வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்கள் அரசிடம் வலியுறுத்த வேண்டும் - என்றும் மனோ கணேசன் இடித்துரைத்தார்.

அரசியல் கட்சிகளின் இறுதி இலக்கு வேறாக இருந்தாலும், ஆரம்பப் பயணம் ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தனியார் வானொலி ஒன்றின் நேர்காணல் நிகழ்ச்சியில் வடக்கு, கிழக்கு அரசியல் நிலவரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு கூறினார்.






# 20 நாள்களாக உயிருக்கு போராடிய யானை இறந்தது

மட்டக்களப்பு, மார்ச் 01

மட்டக்களப்பு செங்கலடி - கொம்மாதுறை தீவுப் பகுதியில் கடந்த 20 நாட்களாக காலில் ஏற்பட்ட சூட்டு காயம் காரணமாக வீழ்ந்து கிடந்த காட்டு யானை சிசிச்சை பலனின்றி நேற்று (திங்கட்கிழமை) உயிரிழந்துள்ளது.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை தீவுப் பகுதியில் காட்டு யானை ஒன்று, கால் ஒன்றில் ஏற்பட்ட சூட்டு காயம் காரணமாக நடக்க முடியாமல் கீழே விழுந்து தன்னுடைய உணவுத்தேவைக்காக மீளவும் எழ முடியாமல் தவித்துக்கொண்டு உயிருக்கு போராடி வந்தது.

03 தடவை அம்பாறை மாவட்ட வன ஜீவ



ராசிகள் திணைக்களத்தின் வைத்தியர் குழாமினர் காயப்பட்ட காட்டு யானைக்கு முறையான சிசிச்சை அளிக்கப்பட்டு வந்ததுடன், 20நாள்களாக மட்டக்களப்பு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களஅதிகாரிகள்பராமரித்துஉணவளித்து வந்த நிலையில், மேற்படி யானை நேற்று (திங்கட்கிழமை) உயிரிழந்துள்ளது.



# தளபதிகள் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 01

இலங்கைவிஜயம்மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கடற்படை தளபதி அட்மிரல் முஹம்மது அம்ஜத் கான் நியாசி, இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சனவை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு கடந்த திங்கட்கிழமை விமானப்படை தலைமையத்தில் இடம்பெற்றது.

பாகிஸ்தான் கடற்படை தளபதி, கொழும்பு விமானப்படை தளத்தின் கட்டளை அதிகாரி எயார் கொமடோர் சுரேஷ் பெர்னாண்டோ தலைமையில் விமானப்படை வர்ண அணி வகுப்பு படைப்பிரிவின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

இருதரப்பினருக்குமான கலந்துரையாடலின் பின்பு இந்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் நினைவு சின்னம்களும் பரிமாறப்பட்டன.

மேலும் பாகிஸ்தான் கடற்படைத் தளபதி விமானப்படை பணிப்பாளர்களையும் சந்தித்து கலந்துரையாடினார்.

# ஜே.வி.பி. வேட்பாளர் சாவுக்கு ஜனாதிபதியே முழுப் பொறுப்பு

## எம்.ஏ.சுமந்திரன் சாடல்



நிவித்திகல பிரதேச சபை வேட் பாளர் மரணத்துக்கு முழுப் பொறுப்பு சொல்ல வேண்டியவர் ஜனாதிபதி, நிதி அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவே. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவிடாது நிதியை தேவையான அளவு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கொடுக்காது முடக்கி வைத்திருப்பதும் ஜனாதிபதியே என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இன்று (செவ்வாய்க்கிழமை)திருகோணமலை சல்லி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

மக்களுடைய அடிப்படை உரிமைகளை மறுக்கும் வகையில் அரசாங்கம் பொலிஸாரை ஏவி விட்டு இத் தாக்குதலை நடாத்தி அதன் மூலமாக ஓர் உயிர் பறிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அடிப்படை உரிமைகளை மறுக்கின்ற வகையில் அரசாங்கம் தொடர்ந்தும் செயற்பட்டால் நிலைமை இன்னும் மோசமடையும்.

அப்படி மக்களுடைய ஜனநாயக உரிமைகளை மறுப்பதற்கு அரசாங்கத்துக்கு எந்த உரித்தும் கிடையாது என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

# புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் இயக்கக் கூடிய பஸ்களை நாட்டில் அறிமுகப்படுத்த தீர்மானம்!

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் இயக்கக் கூடிய பஸ்களை அறிமுகப்படுத்த, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்வதற்கான செலவைக் குறைக்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வர்த்தக நகரமான கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தை மையமாக கொண்டு இலங்கை போக்குவரத்து சபையால் மின்சார பஸ்கள் இயக்கப்படவுள்ளன எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதன்படி, முறையான சாத்தியக்கூறு ஆய்வின் அடிப்படையில் ஒரு பரீட்சார்த்த திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை அமைச்சர்கள் அனுமதியளித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரச தலைவரின் எகத்தாளம்

**மக்களால் விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச தரைப்படை அதிகாரியாக இருந்து, பாதுகாப்புச் செயலராக இருந்து என்று படைத்துறைப் பின்புலத்தில் இருந்த அரச தலைவர் பதவிக்கு வந்தவர். ஆனால் அவரது பதவிக் காலத்தில்கூட, அவருக்கு எதிரான போராட்டங்களில் காவல்துறை மற்றும் படையினரின் எதிர் நடவடிக்கைகள் காரணமாகப் போராட்டக்காரர்கள் எவரும் உயிரிழக்கவில்லை.**

**அதற்கு எதிர்மாறாக மக்களாட்சியின் காவலராகவும் கருத்துச் சுதந்திரத்தைப் போற்றும் தலைவராகவும் மக்கள் முன் தன்னைக் காட்டிக்கொண்ட ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் போராட்டக்காரர் ஒருவர் உயிரிழந்திருக்கிறார்கள். ஜேவிபியினர் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் போது காவல்துறையினர் நடத்திய நீர்த்தாரைத் தாக்குதல் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுவீச்சு ஆகியவற்றைத் தொடர்ந்து படுகாயமடைந்த உள்ளூராடர்சி மன்ற வேட்பாளர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்திருக்கிறார்.**

**ஒத்திவைக்கப்பட்ட தேர்தலை நடத்துமாறு அரசிடம் வலியுறுத்துவதற்கு ஒரு உள்ளூராட்சி வேட்பாளரைத் தவிர வேறுயாருக்கு நியாயமான காரணம் இருக்கமுடியும் சொல்லுங்கள்? அப்படி அரசிடம் நியாயம் கேட்டுப் போராட்டத்திற்குப் போனவரே உயிரிழந்திருக்கிறார். இது ஒரு பெருஞ் சோகம், நாட்டின் பேரவலம்.**

**ஆனால், இந்தச் சம்பவத்தின் பின்னர் அது பற்றிக் கருத்துக் கூறியிருக்கும் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் போராட்டங்களை நடத்தி எதிர்க் கட்சிகளால் இந்த ஆட்சியை மிரட்டிவிடமுடியாது என்று எகத்தாளமாகக் கருத்துக் கூறியிருக்கிறார். ஜேவிபியின் கூட்டங்களுக்கு அவர்களின் உணர்ச்சிபொங்கும் உரைகளைக் கேட்க மக்கள் திரள்வார்களே தவிர, அவர்களுக்கு மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்கிற விதமாக ஏளனமும் செய்திருக்கிறார்.**

**மக்கள் போராட்டத்தில் அரச படையினரின், காவலர்களின் அடக்குமுறை காரணமாக ஓர் உயிர் காவுகொள்ளப்பட்டிருக்கிறது என்கிற கவலை கிஞ்சித்தும் இல்லாமல் உயிரிழந்தவருக்காக வருத்தம்கூடத் தெரிவிக்காமல், மக்களைப் பலிக்கடாவாக்குகின்றன எதிர்க்கட்சிகள் என்று பழியை எதிர்க்கட்சி மீது தூக்கிப்போட்டுவிட்டு அதிகாரக் கதிரையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதர் எப்படி மக்களாட்சியின் காவலராக, கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நபராக இருந்திருக்க முடியும்?**

**அரச தலைவர்களாகப் பதவியில் இருந்தபோது – சந்திரிகா குமாரதுங்க சொன்ன "சமாதானத்துக்கான போர்", மகிந்த ராஜபக்ஷ சொன்ன "மனிதாபிமான மீட்புப் போர்" என்பவற்றுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல ரணில் விக்கிரமசிங்கவின் மக்கள் போராட்டங்களை வைத்து ஆட்சியை மிரட்டிவிட முடியும் என்று எதிர்க்கட்சிகள் நினைக்கக்கூடாது என்கிற வார்த்தைகள். மக்கள் போராட்டங்களையும் அதனால் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்களையும் தான் ஒரு பொருட்டாகவே மதிக்கப் போவதில்லை என்பதைத்தான் அவர் இந்த வார்த்தைகளால் கூறுகின்றார்.**

**இதற்காகவே அவருக்கு எதிராக மக்கள் புரட்சி ஒன்று வெடிக்கவேண்டியது அவசியம்.**

**பொருளாதார மீட்சி என்கிற ஒற்றைச் சொல்லை வைத்துக்கொண்டு சர்வாதிகார ஆட்சி ஒன்றைக் கொண்டு நடத்துவதற்கு அவர் முற்படுகின்றார். மக்களால் ஒரு போதும் தனக்குக் கொடுக்கப்படாத அதிகாரங்களை வைத்துக்கொண்டே மக்களை நசுக்கி ஒடுக்கிவிடுவதற்கு இந்த வாய்ப்பை அவர் பயன்படுத்திக்கொள்கிறாரோ என்று தோன்றுகின்றது. தவறு செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்காத வரைக்கும்தான் எல்லோரும் நல்லவர்களாக இருக்கின்றார்கள் என்பது ரணில் விடயத்தில் மிக நன்றாகவே பொருந்திப்போகின்றது.**

# பேரணியில் இறந்த போராளிக்கு அரசும் ஜனாதிபதியுமே பொறுப்பு

## இராதாகிருஷ்ணன் காட்டம்



போராட்டத்தில் உயிர் நீத்த போராளியின் உயிருக்கு பதில் கூற வேண்டியதும் அந்த பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேணடியதும் இந்த அரசாங்கமும் ஜனாதிபதியுமே.

அன்று கட்சி ஆதரவாளர்களை வைத்து போராட்டகாரர்களைத் தாக்கினார்கள். இன்று பொலிஸாரை வைத்துத் தாக்குகின்றார்கள்.

இதுதான் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்ஹவின் ஜனநாயகமா என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மக்கள் எதிர்ப்பு போராட்டத்தின் பொழுது தாக்குதலுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த போராட்டக்காரரின் குடும்பத்தாருக்கு மலையக மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று இந்த நாட்டில் நடைபெறுவது ஜனநாயகமா? அல்லது அராஜக அரசியலா? என்ற கேள்வி அனைவரிடமும் எழுந்துள்ளது. இந்த நிலைமை தொடருமானால் சர்வதேச ரீதியில் எமக்கு உதவி செய்யக் காத்திருக்கின்ற நாடுகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அந்த உதவிகளைச் செய்வதில் பின்வாங்கலாம். எனவே அரசாங்கம் ஜனநாயக போராட்டங்களை பொலிஸாரைக் கொண்டு அடக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி இன்று பொறுப்பற்ற விதத்தில் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகின்றார். தேர்தலை ஒரு விளையாட்டாகக் கருதுகின்றார். அது மக்களின் ஜனநாயக உரிமை என்பதை ஜனாதிபதியும் அரசாங்கமும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நிலைமை தொடருமாக இருந்தால் மிக விரைவில் நாம் மலையக மக்களை ஒன்று திரட்டி அரசாங்கத்துக்கு எதிராகப் பாரிய ஜனநாயக போராட்டம் ஒன்றை தலைநகரில் முன்னெடுப்போம். மக்களைத் தூண்டிவிட்டு அரசியல் செய்ய நினைப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

ஜனநாயக நாடு ஒன்றில் தங்களுடைய கருத்துக்களை சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. இதனை யாராலும் தடுக்க முடியாது.

அன்று ஆதரவாளர்களை வைத்துப் போராட்டகாரர்களை தாக்கியதால் கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை விட்டு ஒடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதே போல இந்த அரசாங்கமும் செயற்படுவதற்கு முற்படட்டால் ஜனாதிபதி ரணிலுக்கும் அதே நிலைமை ஏற்படும்.

# இந்திய அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது

## பாலித்த ரங்கே பண்டார புகழாரம்

ஜி - 20 மாநாட்டில் இலங்கை தொடர்பாக இந்தியா, பெரிஸ் சமூகம் மற்றும் ஜப்பான் முன்வைத்த கருத்துக்கள் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ள சீனாவுக்கு சிறந்த பதிலாக அமைந்திருந்தது.

இந்தியாவின் இந்த முயற்சியை நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இந்தியாவில் இடம்பெற்று முடிவடைந்த ஜீ - 20 மாநாடு இலங்கைக்கு மிகவும் சாதகமாக அமைந்தது. மாநாட்டில் கலந்துகொண்டிருந்த பெரிஸ் சமூகம், ஜப்பான் மற்றும் இந்தியா இலங்கையின் நிலைமை தொடர்பாக மிகவும் நல்லமுறையில் எடுத்துரைத்திருந்தன.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சீனா நல்ல முடிவொன்றை எடுக்கும் வகையில் அந்த நாடுகளின் பதில்கள் அமைந்திருந்தன.

இந்த விடயத்தில் இந்தியா மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தது. அதற்காக எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

அத்துடன் வீரமுள்ள சிங்கம் போன்றோ நரியைப்போன்றே சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதன் மூலம் எதனையும் செய்ய முடியாது.

சர்வதேச அளவில் கட்டியெழுப்பப்படும் உறுதிமிக்க இணைப்புகளின் வலிமையில் மட்டுமே இதனை மேற்கொள்ள முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த கடனைப் பெறுவதற்கு நாம் எந்த அளவிற்கு பொருத்தமான தகுதிகளை அடைந்துள்ளோம் என்பது முக்கிய காரணியாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு கட்டுப்படக்கூடாது என சிலர் தெரிவித்துவருகின்றனர். இந்த விடயத்தில் நாங்கள் பாகிஸ்தானிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். பாகிஸ்தான் ஆரம்பத்தில் நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் சிலவற்றைப் புறக்கணித்து வந்தது.

இதனால் சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானில் இருந்து விலகிச்சென்றது. பின்னர் பாகிஸ்தான் சர்வதேச நாணய நிதியத்துக்கு முன்னால் மண்டியிடவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் எங்களது நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

எங்களுக்கு பணம் தேவை என்றிருந்தால் நாங்கள் அவர்களது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். என்றாலும் ரணில் விக்கிரமசிங்க இந்த நிலையை அறிந்த மிகவும் சாமத்தியமாக அவர்களுடன் உரையாடி, எமது நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், இந்தக் கடன் உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

அத்துடன்நாடுஎதிர்கொண்டுள்ளபொருளாதாரநெருக்கடிக்குதீரவுகாணசர்வதேசநாணய நிதியத்தின் உதவி மிகவும் அத்தியாவசியமாகவே இருந்தது. இந்தக் கடன் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியாமல்போனால் நாட்டின் இருப்புக்கே பாதிப்பு ஏற்படும்.

இதனை உணர்ந்தே ரணில் விக்கிரமசிங்க ஆரம்பத்தில் இருந்து சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து வந்தார். - என்றார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களை சந்தித்தார் ஜப்பான் தூதரக அதிகாரி




ஜப்பானிய தூதரக அரசியல் பிரிவு அதிகாரியொருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று (திங்கட்கிழமை) மாலை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கலைப்பீட மாணவர் ஒன்றிய அறையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஜப்பானிய தூதரக அரசியல் பிரிவு அதிகாரி ஹனா ,யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சில்வஸ்டார் ஜெல்சின், உபதலைவர் இரா.தர்ன், மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி முன்னெடுக்பட்ட போராட்டத்தின் நோக்கம் பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் வடக்கு கிழக்கில் பொதுசன வாக்கெடுப்பின் முக்கியத்துவம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வடக்கு கிழக்கு தழுவிய திட்டமிட்ட பௌத்தமயமாக்கல், திட்டமிட்ட நில அபகரிப்பு , அரசியல் கைதிகளின் விடுதலை, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் , மகாவலி அபவிருத்தி திட்டமும் திட்டமிட்ட சிங்கள மயமாக்கமும், மட்டக்களப்பு மயிலத்தமடு மேய்ச்சல் தரவைபிரச்சினை,தமிழ்மாணவர்சமூகத்தின் மீதான அரச அடக்குமுறைகள் என பலதரப்பட்ட விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# போலித் தகடு கார் சிக்கியது

வெல்லம்பிட்டியிலுள்ள வீடொன்றில் போலி இலக்கத் தகடுபொருத்தப்பட்டகார்ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மிரிஹான பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

மேற்படிகாரின் இலக்கம் வேறொருகாருக்குச்சொந்தமானது என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

காரை வைத்திருந்த சந்தேக நபரிடம் விசாரணை நடத்தியபோது, பண்டாரகம பிரதேசத்தில் உள்ள ஒருவரிடமிருந்து இந்தக் காரை 20 லட்சத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு மேற்படி கார் பெறப்பட்டுள்ளமைதெரியவந்துள்ளது.

# 'குடு'வுடன் 2 பெண்கள் கைது



'குடு' போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் உட்பட இருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் போதைப் பொருள் விற்பனை இடம் பெற்று வருவதாக வவுனியா பொலிஸ் நிலைய போதைத் தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்படி பகுதியில் உள்ள வீடொன்றைச்சோதனையிட்ட பொலிஸார் அங்கு 10 கிராம் 'குடு'போதைப்பொருளை மீட்டனர்.

மேற்படி போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அதே பகுதியை சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரும் 26 வயதுடைய ஆண் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி கைது நடவடிக்கை வவுனியா தலைமை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஏ.எஸ்.ஜெயக்கொடியின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர்களான மதுசங்க மற்றும் நின்சலா மற்றும் பொலிஸ் சார்ஜன்களான ஹேரத், மஞ்சுலா, பொலிஸ் கொஸ்தாபல்களான விதானகே,ஜமிந்த,மிதுசன்,பெண் பொலிஸ் கொஸ்தாபல் ஜதுனி ஆகியோரை உள்ளடக்கிய பொலிஸ் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

## மருத்துவ கழிவு விவகாரத்தில் அரசியலாளருக்கு மக்கள் ஆதரவில்லை



வவுனியா வைத்தியசாலையின் கழிவுகள் ஓமந்தை வைத்தியசாலையின் பின்புறமாளரியூட்டும் நிலையமூடாக எரிக்கப்படுவதற்கு எதிராக திங்கட்கிழமை மேற்கொள்ளப்படவிருந்த போராட்டம் பிசுபிசுத்துப்போனது.

வவுனியா வைத்தியசாலை கழிவுகள் ஓமந்தை ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு பின்புறமாகவுள்ள அதற்கென அமைக்கப்பட்ட எரியூட்டும் நிலையத்தில் சுமார் 6 வருடங்களாக எரியூட்டப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் சில சமூக ஆர்வலர்கள், அரசியல் பிரதிநிதிகள் இணைந்து மேற்படி எரியூட்டல் நிலையத்தால் அருகில் உள்ள ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர்கள் மற்றும் அந்தப் பிரதேசத்தவர்களுக்கு ஆபத்து எனத் தெரிவித்து நேற்று காலை ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ள திட்டமிட்டிருந்தனர்.

இதற்கு ஆதரவாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உட்பட சிலர் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

எனினும் கிராம மக்களின் ஒத்துழைப்பின்மையாலும் பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பின்மையாலும் மக்கள் வருகை தராத நிலையில் அரசியல்வாதிகள் திரும்பி சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இல்லாத நிதியை எவ்வாறு வழங்குவது? தேர்தல் ஆணைக்குழுவுக்கு பந்துல பதில்



கொழும்பு, மார்ச் 01

அரசாங்கத்திடம் நிதியிருந்தால் தேர்தலுக்காக அதனை வழங்குவதில் எவ்வித சிக்கலும் இல்லை. இல்லாத நிதியை எவ்வாறு வழங்கு வது? மார்ச்சில் வருமானத்துக்கும் செலவிற்குமிடையிலான இடைவெளி 2300 கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு தேர்தலுக்கு நிதியை வழங்குவது என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவ்வாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாகத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பெற்றுக் கொள்வதில் தலையீடு செய்யுமாறு கோரி தேர்தல் ஆணைக்குழுவால் சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் என்பது 225 நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் உள்ளடக்கமாகும்.

அந்த வகையில் ஏனைய அனைத்து கட்சிகளும் இதற்கு உடன்பட்டுள்ள நிலையில், பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு தொடர்பாக இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

எம்மிடம் நிதி இருந்தால் அதனை வழங்குவதில் எவ்வித சிக்கலும் இல்லை. மார்ச் மாதம் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்கல், ஓய்வூதியம், சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்கல் உட்பட ஏனைய தேவைகளுக்காக 8300 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

வரி அதிகரிக்கப்பட்டதன் பின்னரும் மார்ச் மாத வருமானத்துக்கும் செலவிற்கும் இடையில் 2300 கோடி இடைவெளி காணப்படுவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மார்ச்சில் கடன் சேவைகளுக்காக 5 ஆயிரம் கோடி அவசியமாகும். அதற்கமைய மார்ச்சில் ஒட்டு மொத்தமாக 5 ஆயிரத்துக்கு அதிக பற்றாக்குறை ஏற்படும் என்று திறைசேரியால் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பெற்றுக்கொள்வதற்கு கடன் பெறவும் முடியாது. பணத்தை அச்சிடவும் முடியாது. அவ்வாறிருக்கையில் முடியாதவொன்றை எவ்வாறு செய்ய முடியும்?

அதே வேளை அரச ஊழியர்களுக்கான சம்பளம் , ஓய்வூதியம் , சமுர்த்திக் கொடுப்பனவு மற்றும் அரச கடனுக்கான வட்டி என்பவற்றைச் செலுத்துவதைத் தவிர்க்க முடியாது.

எனவே தான் தேர்தலுக்கான நிதியை வழங்குவது கடினம் என திறைசேரி செயலாளரால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் முன்வைத்துள்ள காரணிகள் தவறென்றால் அதனை நீதிமன்றமே தீர்மானிக்கும். - என்றார்.

## பொது போக்குவரத்து அத்தியாவசிய சேவை

### வர்த்தமானி வெளியீடு



பயணிகளுக்கும் பண்டங்களுக்குமான பொது போக்குவரத்தை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் விசேட வர்த்தமானியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டார்.

(235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் படி, வரைவிலக்கணம் கூறப்பட்ட ஏதேனும் துறைமுகத்தினுள் இருக்கும் கலத்திலிருந்து உணவுப் பொருள் அல்லது பானம், அல்லது நிலக்கரி, எண்ணெய், எரிபொருள் என்பவற்றுள் எவற்றையும் வெளியேற்றுதல், கொண்டுசெல்லல், தரையிறக்குதல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், அகற்றுதல் என்பதற்காக, தெருக்கள், பாலங்கள், மதகுகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், ரயில் பாதைகள் உட்பட தெரு மூலமான, ரயில் மூலமான அல்லது வான் மூலமான போக்கு-வரத்துச்சேவைகளுக்கானவசதிகளை வழங்குதலும் பேணுதலும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அத்தியாவசிய சேவைகளாக அந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன.

## நிதி அமைச்சு செயலருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



தேர்தலை பிற்போடும் அரசின் சூழ்ச்சித் திட்டத்துக்கு துணை நிற்கும் நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக சகல விதமான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டில் ஜனநாயகம் இல்லாது செய்யப்பட்டுள்ளது. போராட்டம் இல்லை, ஆர்ப்பாட்டங்கள்கூட நடத்துவதற்கு அனுமதி இல்லை. இந்நிலைமை ஆபத்தானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை எனக்கூறும் அரசு, வேறு நிகழ்வுகளை நடத்தி பணம் செலவழிக்கின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசை நடத்துவதற்கு ஒன்றரை நாளுக்கு செலலாகும் பணம் தான் தேர்தலை நடத்த அவசிம். அதனை வழங்கலாம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் நிதி அமைச்சின் செயலாளர் மறுக்கின்றார். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!



கொழும்பு மாவட்டத்தில் தெஹிவளை, பிலியந்தலை, இரத்மாலானை, கொத்தட்டுவ, மகரகம போன்ற பிரதேசங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என சமூக வைத்திய நிபுணர், வைத் தியர் இந்திக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை புத்தளம், கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இந்நாள்களில் அதிக டெங்கு நோயார்கள் பதிவாகுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த வருடத்தில் மாத்திரம் 11 ஆயிரத்து 184 பேர் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## திலினிக்கு எதிரான விசாரணை ஜூனில்



திலினி பிரியமாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர் வரும் ஜூன் மாதம் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் விசாரணை செய்வதற்கான திகதியை கொழும்பு மேல் நீதி மன்ற நீதிபதி இன்று (செவ்வாய்க் கிழமை) நிர்ணயித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு கார் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக மூடப்பட்ட கணக்கிலிருந்து 80 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையைக் கொடுத்து தங்காலை பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் மோசடி செய்தார் எனக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இன்று (செவ்வாய்க்கிழமை) திலினி அழைக்கப்பட்டார்.

இந்த வழக்கை தீர்வுக்கு கொண்டுவர இரண்டரை மாத கால அவகாசம் வழங்குமாறு குற்றம்சாட்டப்பட்ட திலினி பிரியமாலி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்தே நீதிமன்றம் மேற்படி திகதி வழங்கி விசாரணைகளை ஒத்திவைத்தது.




காலைக்கதிர்
Kalaikkathir



## ரணில் அச்சமடைந்துள்ளார் சாணக்கியன் சுட்டிக்காட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சத்தில் உள்ளார் என்பது அவர் வெளியிட்டுள்ள புதிய வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளிப்பட்டுள்ளது என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட சந்திப்பில் பங்கேற்றிருந்த இலங்கைத் தமிழரசு கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் தொடர்பிலும் இரா.சாணக்கியன் இதன்போது சில கருத்துக்களை பகிர்ந்திருந்தார்.

குறிப்பாக தெற்கில் தனக்கு மக்கள் பலம் இல்லை என்பதையும், வடக்குகிழக்கில் தமிழசு கட்சிக்கு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ள செல்வாக்கையும் கண்டு அஞ்சியே ஜனாதிபதி உள்ளூராட்சி மன்றத்தேர்தலை ஒத்திவைக்க முற்படுகின்றார் என சந்தேகம் எழுந்துள்ளது எனவும் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக பல பகுதிகளில் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் அடுத்த சில நாள்களுக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உருப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க மேற்படி திகதியில் தேர்தலை நடத்துவதே சிறந்தது எனவும் இரா.சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

# இணைந்த வடக்கு – கிழக்கிலேதான் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படும்!

### அமைச்சர் வியாழேந்திரன் திட்டவட்டம்



வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டும் எனவும் இணைந்த வடக்கு கிழக்கில் தான் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படும் எனவும் வர்த்தக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி மீகாவெல் பாலர் பாடசாலையின் மாணவர் பிரியாவிடை நிகழ்வும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

நல்லிணக்க அரசியல் என்பது தமிழர்களின் இருப்பை அழிக்கின்ற அல்லது அழிக்க நினைக்கின்ற – நாசமாக்க நினைக்கின்ற – இந்த அரசியலுக்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதில் ஆயிரம் வீதம் உறுதியாக இருப்பவர்கள் நாங்கள். வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டு இந்தியா வடக்கு கிழக்கு பிரச்சினையை ஒரு தீர்வாகக் கொண்டு வந்தது. வடக்கு கிழக்கு இணைப்பு சம்பந்தமான ஒப்பந்தம் வந்த பொழுது இணைந்த வடக்கு கிழக்கு இருந்த போது அதன் பின் இந்த வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டது.

இந்த வடக்கு கிழக்கை பிரித்ததிலே மிக முக்கியமான சூத்திரகாதியாக இருந்த கட்சி ஜேவிபி கட்சியாகிய மக்கள் விடுதலை முன்னணி ஆகும். இன்று காலையில் ஒரு செய்தியை பார்த்தேன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக எதிர்ப்பதாக கட்சியின் உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி ஊடக சந்திப்பின் போது தெரிவித்துள்ளார் .

எமது நிலைப்பாடும் சம்பந்தனின் நிலைப்பாடும் இதுவாகவே இருக்கின்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தெற்கு மக்களுக்கு விருப்பம் இல்லாத அரசியல் தீர்வு எமக்கு வேண்டாம் என்று சம்பந்தன் தெரிவித்தமைக்கு அமைவாக நாங்களும் அதை எதிர்க்கின்றோம் என்று சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

கிழக்கில் எங்களது அரசியல் நிலைப்பாடு தமிழர்களின் நில வள பொருளாதார இருப்பைத் தமிழர்களோடு இருந்து கொண்டு முதுகில் குத்துகின்ற இந்த நல்லிணக்க அரசியலுக்கு எமது கழகம் ஒருபோதும் ஒத்துக் கொள்ளாது.

ஆகவே, வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் தான் கிழக்கின் இருப்பைப் பாதுகாக்க முடியும். இணைந்த வடக்கு கிழக்கில் தான் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படும் .

இணையாத வடக்கு கிழக்கில் காணி பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் வடமாகனம் ஓரளவு தப்பி பிழைக்கலாம் கிழக்கு தப்பி பிழைக்காது.

காணி பொலிஸ் அதிகாரம் இல்லாமலே கிழக்கு மாகாண ஆளுநருடைய சில ஏற்கத்தகாத நடவடிக்கைகள். சில திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு துணை போகின்ற தன்மை. சில முஸ்லிம் இனவாத அரசியல்வாதிகள் தமிழர்களுடைய நில வளத்தை சூறையாடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஒருவேளை இணைந்த வடக்கு கிழக்கு இல்லாமல் தனியாகக் கிழக்கு மாகாண சபைக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் உங்களது நிலைமை என்னவாகும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

நாங்கள் உறுதியாகச் சொல்லுகின்றோம். வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும். இணைந்த வடக்கு கிழக்குக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சீர் திருத்தத்துடன் கூடிய 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இணைந்த வடக்கு கிழக்கினால்தான் கிழக்கைப் பாதுகாக்க முடியும் கிழக்கை பாதுகாத்தால் தான் வடக்கு கிழக்கை இணைக்க முடியும் என்று கூற விரும்புகின்றேன். – எனத் தெரிவித்தார்.

## வட்டிவீதத்தை அதிகரிக்க அரசு இணங்கவில்லையாம்!

சர்வதேச நாணய நிதியத்துடனான அண்மைய பேச்சுகளின் போது மீண்டும் 2.5 சதவீதத்தால் வட்டி வீதங்களை அதிகரிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இலங்கை அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத்தால் வட்டி வீதங்களைக் குறைக்க முடியாது எனத் தெரிவித்த அவர் , வங்கி வட்டி வீதங்களின் அடிப்படையிலேயே பண வீக்க வீதமும் உள்ளடங்கியுள்ளதால் அது நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் பங்களிப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

வங்கி வட்டி வீதங்களைக் குறைப்பதாக சில அரசியல்வாதிகள் மக்களுக்கு உறுதிமொழியளிக்கின்றனர். அது அவர்கள் அறியாமையால் வெளியிடும் கருத்தாகும்.



நிதி சட்டத்துக்கமைய வங்கி வட்டி வீதங்களைத் தீர்மானிப்பது மத்திய வங்கியாகும். மத்திய வங்கி யின் நிதி சபையின் ஊடாக எடுக்கப்படும் தீர்மா னத்துக்கமையவே கொள்கை ரீதியிலான வட்டி வீதம் மற்றும் வங்கி வட்டி வீதம் என்பன தீர்மானிக்கப்படுகின்றன.

அதற்கமைய பண வைப்பாளர்களுக்கான வட்டி வீதம் மத்திய வங்கியாலேயே தீர்மானிக்கப்படுகிறது. திறைசேரியின் கடன் வழங்கல் செயற்பாடுகளின் போது வட்டி தொடர்பான தீர்மானங்களிலும் மத்திய வங்கியின் தலையீடு காணப்படும். மத்திய வங்கியின் வட்டி வீதம் நாட்டின் பணவீக்க வீதத்துடன் பிணைந்ததாகக் காணப்படுகிறது.

அதற்கமைய பணவீக்க வீதம் படிப்படியாக வீழ்ச்சியடையும் போது வட்டி வீதமும் வீழ்ச்சியடையும். ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களும் வங்கி வட்டி வீதங்களைக் குறைக்குமாறு அரசாங்கத்தையே வலியுறுத்துகின்றனர்.

அவ்வாறு அரசாங்கத்தால் வட்டிவீதத்தைக் குறைக்க முடியாது. நிதி ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கான ஆயுதமாகவே மத்திய வங்கியால் வங்கி வட்டி வீதம் பயன்படுத்தப்படுகிறது.

எனவே ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்திய வங்கியிடமே இதனை வலியுறுத்த வேண்டும். அண்மையில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற பேச்சுகளின் போது மேலும் நூற்றுக்கு 2.5 சதவீதத்தால் வட்டி வீதங்களை அதிகரிக்குமாறு வலியுறுத்தப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. எவ்வாறிருப்பினும் இலங்கை தரப்பு அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. – என்றார்.

## சிறீதரன் எம்.பியுடன் மீனவர்கள் சந்திப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 01

வடக்குமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் செவ்வாய்க்கிழமை, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலின்போது, சமகாலத்தில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளின் அதிகரிப்பு, எல்லைதாண்டிய மற்றும் சட்டவிரோத மீன்பிடியால் கடற்றொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் எதிர்கொள்ளும் வாழ்வாதார இடர்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைச், சங்கப் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதுவிடயமாக உரிய தீர்வினைப் பெறுவதற்கு, தன்னாலான முயற்சிகளை முன்னெடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

வடமாகாண மீனவசங்கப் பிரதிநிதிகள் அண்மையில் யாழ்ப்பாணத்தில் பிள்ளையார் விடுதியில் ஒன்றுகூடி இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களிற்கு அனுமதி வழங்குவதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் ஆராய்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## கச்சதீவுக்கு இம்முறை தமிழ்நாட்டிலிருந்து 2,500 பேர் வருவார்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 01

கச்சதீவு புனித அந்தோணியார் ஆலய உற்சவத்திற்காக தமிழகத்தில் இருந்து 2 ஆயிரத்து 408 பேர் வருகை தருவதற்காக பதிவு செய்துள்ளனர்.

கச்சதீவு ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 3, 4ஆம் திகதிகளில் நடைபெறுவுள்ளது. இந்த திருவிழாவிற்காகவே தமிழ்நாடு இராமேஸ்வரத்தில் இருந்து 2 ஆயிரத்து 408 பேர் வருகை தரவுள்ளனர்.

இவர்கள் 60 ட்ரோலர் படகுகளிலும் 12 நாட்டுப் படகுகளிலும் வருகை தரவுள்ளனர்.

வருகை தருவோரில் ஆயிரத்து 960 ஆண்களும், 379 பெண்களும் 69 சிறுவர்களும் அடங்குகின்றனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## சமஷ்டியைக் கேட்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. சமஷ்டியைப் பெறாமல் ஓயமாட்டேன் என்று கூறுகின்றார். ஆனால், ஜனாதிபதியோ சமஷ்டியைத் தரமாட்டேன் என்று கூறுகின்றார். இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன? – என்ற கேள்விக்கு மனோ கணேசன் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குகின்றாரா? இல்லையா? என்பது கூட சரியாகத் தெரியவில்லை. அவரின் நிலைப்பாட்டில் உண்மையில் தெளிவு இல்லை. ஜனாதிபதிக்கு ஆதரவு என்று ஒரு தோற்றப்பாட்டை அவர் காட்டுகின்றார். ஜனாதிபதியும் அவருடன் நெருக்கம் என்று காட்டிக்கொள்கின்றார்.

விக்னேஸ்வரன் கொழும்பில் இருக்கின்றாரா அல்லது யாழ்ப்பாணத்தில் இருக்கின்றாரா என்பது கூடத் தெரியாது.

13 ஆவது திருத்தத்தைத் தொட்டுப் பார்க்கமாட்டோம் என்று சிலவேளைகளில் விக்னேஸ்வரன் கூறுகின் றார். சிலவேளைகளில் 13 ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார். பின்னர் சமஷ்டி வேண்டும் என்று அவர் சொல்கின்றார்.

விக்னேஸ்வரன் சமஷ்டி தொடர்பில் கரிசனை கொள்வதற்கு முன்னர் தனது அரசியல் நிலைப்பாடுகளில் தொய்வில்லாமலும், தெளிவாகவும் இருக்க வேண்டும்.

அவரின் அரசியல் நிலைப்பாடுகளில் தெளிவு இல்லை. நிறையத் தொய்வு இருக்கின்றது. அதை விக்னேஸ்வரன் மாற்றியமைக்க வேண்டும்.

மக்களின் ஆணையை விக்னேஸ்வரன் சரியாகப் பயன்படுத்துவார் என்று நான் எதிர்பார்கின்றேன் – என்றார்.

## இந்திய மீன்பிடி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

IND.TN.06.MM.இலக்க லக்சுமி அம்மாள் மற்றும் IND.PY.PK.MM.978 ஆகிய படகுகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட உத்தரவு நீதிமன்றினால் கடற்படை, வெளிவிவகார அமைச்சு, கடற்றொழில் அமைச்சு ஆகியவற்றுடன் இந்திய தூதரகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கட்சி உத்தரவுகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெவ்வேறு தீர்மானங்களை எடுத்து தமது கட்சி உறுப்பினர்களுக்கு அறிவித்திருந்தன.

கட்சிகளின் தீர்மானங்களின் அடிப்படையில் பெரும்பாலன உறுப்பினர்கள் செயற்பட்டபோதும் ஒரு சிலர் கட்சி தீர்மானங்களை மீறியும் செய்யப்பட்டிருந்தனர்.

குறிப்பாக தற்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ரெலோ மற்றும் புளொட் ஆகிய கட்சிகளின் ஒரு சில உறுப்பினர்களே கட்சித் தீர்மானத்தை மீறிச் செயற்பட்டிருந்தனர்.

புளொட் அமைப்பு இந்த வரவு செவுத் திட்டத்தை புறக்கணிப்பது எனத் தீர்மானம் எடுத்திருந்தபோதும் அந்தக் கட்சியின் உறுப்பினர் நித்தியானந்தன் சபை அமர்வுகளில் கலந்துகொண்டு வாக்கெடுப்பில் தான் நடுநிலை வகிப்பார் எனத் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று ரெலோ அமைப்பும் இந்த வரவு செலவுத் திட்ட வாக்களிப்பில் கலந்துகொள்ளாது புறக்கணிப்பது எனத் தீர்மானம் எடுத்திருந்தபோதும் அக் கட்சியின் உறுப்பினரான தனேந்திரன் ஆதரவை வழங்கியிருந்தார்.

இதனையடுத்து மேற்படி இரண்டு உறுப்பினர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக கட்சிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்றும் நாளையும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்திற்கு ஆதரவாகவும் ஆசிரியர்கள் இந்த கறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தொழிற்சங்கப் போராட்டத்திற்கு ஆதரவாக பணி நிறுத்தத்தில் ஈடுபடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டபோதும் பின்னர் அதனை கறுப்புப் போராட்டமாக நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டதாக ஸ்டாலின் மேலும் தெரிவித்தார்:

ஆசிரியர்கள் கறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு வசதியாக அவர்கள் கறுப்பு ஆடைகளையோ கறுப்புப் பட்டிகளையோ அணிந்து பாடசாலைக்கு வருவதை இன்றும் நாளையும் அனுமதிக்குமாறு அவர் அதிபர்களிடம் கோரிக்கையும் விடுத்திருக்கிறார்.

## வங்கிக் கட்டமைப்பு ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு ஆதரிவளிப்பதற்காக அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் வங்கி ஊழியர்களும் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

வங்கித் துறையில் உள்ள பிரச்சினைகள் குறித்து செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அரச வங்கிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும், வாடிக்கையாளர்களுக்கு தடங்கல் ஏற்படாத வகையிலும் வங்கிச் செயல்பாடுகளைப் பேணுவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாட்டில் நிதி உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் விரிவான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் இவ்வேளையில் வங்கிக் கட்டமைப்பு செயலிழந்தது என்ற செய்தி, சர்வதேச சமூகத்திற்கு செல்வது, நாட்டுக்கு நல்லதொரு நிலைமை அல்ல எனவும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

வங்கி ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கும் சந்தர்ப்பத்தில் சாவியை வழங்குதல், தங்க ஆபரணங்கள் அடங்கிய பெட்டகங்களின் சாவியை கையளித்தல் போன்ற ஏற்பாடுகள் அடங்கிய சுற்றறிக்கையை வெளியிடுவது வழமையான மரபு என்றாலும் இன்று முன்னெடுக்கப்படவுள்ள ஒன்றிணைந்த வங்கித் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் அவ்வாறானதொன்றும் இடம்பெறவில்லை என இந்தக் கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

அதன்படி, வங்கித் தலைவர்கள் தலைமையிலான உயர் நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க ஒப்புக்கொண்டது.

மேலும் இங்கு கருத்துத் தெரிவித்த இலங்கை வங்கியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி றொனால்ட் பெரேரா, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு வங்கிக் கட்டமைப்பின் ஆதரவு மிகவும் அவசியமானது எனவும், நாட்டிற்கான அவர்களின் பொறுப்பை தட்டிக்கழிக்க வேண்டாம் என்றும் அனைத்து வங்கி ஊழியர்களையும் தாம் கேட்டுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, வரி அறவீடு தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

முழு நாடும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இத்தருணத்தில் புரிந்துணர்வுடன் செயற்பட்டு நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்த உதவுவது அனைவரினதும் பொறுப்பாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை வங்கியின் தலைவர் சட்டத்தரணி றொனால்ட் சி பெரேரா தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நாடு இப்போது மிகவும் கடினமான பொருளாதார நிலையில் உள்ளது. இந்நிலையில் நாளை பல தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளன. இலங்கை வங்கியின் தலைவர் என்ற வகையில், எமது ஊழியர்களை நாளை பணிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் எமது வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை வங்கி சிறந்த சேவையை வழங்குகிறது. ஒரு நாள் கூட வங்கி மூடப்பட்டால், நாடு முழுவதும் பெரும் அசௌகரியம் ஏற்படும்.

மேலும், வரி வசூலிப்பு மற்றும் வரி விகிதங்களைக் குறைப்பது குறித்து அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. எனவே, இந்த விவகாரம் குறித்து அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளோம். இந்தப் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும் என நம்புகிறோம். வங்கி மற்றும் வங்கியின் வாடிக்கையாளர்கள் சார்பாக பணிக்கு வருமாறு எங்கள் உழியர்களை கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பல தொழிற்சங்கங்கள் இணைந்து நாளை வேலைநிறுத்தம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாக அறிகின்றோம். மக்கள் வங்கி என்ற ரீதியில், மக்கள் வங்கியின் ஊழியர்கள் என்ற ரீதியில் முறையாக கடமைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு மக்கள் வங்கி பெரும் பங்களிப்பை வழங்குகின்றது.

நாங்கள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கும், அதிக எண்ணிக்கையிலான மக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் சேவைகளை வழங்குகிறோம். எனவேதான், வழமை போல் பணியில் சேர்ந்து, சேவையைப் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த நேரத்தில், அரசாங்கத்திற்கோ நாட்டுக்கோ அல்லது பொருளாதாரத்திற்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறோம் – என்றார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## சர்வாதிகாரத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வாதிகார முயற்சி

நாடு தற்போது பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி இருக்கின்ற நிலைமையில் பல தொழிற்சங்கங்களும் போராட்டங்களை நடாத்தி வருவதனால் பாதிப்புக்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவே பல்வேறு சேவைகளையும் அத்தியாவசிய சேவைகள் என வர்த்தமானியில் ஜனாதிபதி பிரகடனப்படுத்தி வருகிறார்.

தீடிர் திடீரென வர்த்தமானி பிரகடனங்களை செய்து சர்வாதிகாரமான முறையிலே நாட்டைக் கொண்டு செல்ல முயற்சிப்பது இன்னும் இன்னும் குழப்பங்களைத் தான் ஏற்படுத்தும்.

இதில் சில விடயங்கள் அத்தியாவசிய சேவையாக இருந்தாலும் ஏனையவற்றை தொழிற்சங்கங்களுடன் கலந்து பேசிச் செய்யலாம். இதனை விடுத்து எல்லாத்தையுமே அத்தியாவசிய சேவைக்குள் கொண்டு வருவது நாட்டை சர்வாதிகார ஆட்சிக்குள் கொண்டு போகும் ஒரு முயற்சியாகத்தான் பார்க்கப் படுகிறது.

இவ்வாறு பல சேவைகளையும் அத்தியாவ சிய சேவைகள் ஆக்குவதன் மூலம் தொழிற் சங்கங்களை அதிகாரத்திற்குள் அடக்கி வைத்திருப்பது போராட்டங்களை மழுங்கடிப்பது என்பதற்கு மேலாக சில இடங்களில் அரசாங்கத்தின் அதிகாரங்களை துஸ்பிரயோகம் செய்வதற்கும் வாய்ப்புகள் உருவாகும். ஆகையினால் இவைகள் ஒரு நல்ல விசயமாகத் தெரியவில்லை.

தேர்தல்

மேலும் தேர்தலைக் கோரி போராட்டம் நடாத்தியவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்திருக்கின்றார். அரசின் இத்தகைய அடக்குமுறைகளை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி தான் மிகப் பெரிய போராட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால் தேர்தலை மறுப்பது ஜநாயக விரோதச் செயல் என்றுதான் நினைக்கின்றோம். தேர்தல் நடத்துவதற்கு இவ்வளவு தூரம் வந்த பின்னர் இரத்துச் செய்வது நல்லவிசயமல்ல. தேர்தலை பிற்போடுவது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சட்டத்தரணிகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் வழக்காடியதை, சாலிய பீரிஸ் ஒரு பக்கச் சார்பான நபர், அவரது ஆலோசனையின் அடிப்படையில் ஆணைக்குழு செயற்பட்டது என்று மறைமுகமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அவரது கருத்தை மேற்கோள்காட்டி வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, இவ்விவகாரத்தில் எந்தவொரு தரப்புடனும் தொடர்புபடாத சட்டத்தரணியொருவரை நியமிக்கவேண்டும் என்பதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். இருப்பினும் இங்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை, இந்த அரசாங்கத்தை இயக்கமுடியாது என்று கூறியவரையே தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். அவரை விடவும் ஐக்கிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த சட்டத்தரணியை தேர்ந்தெடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் – என்று தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் வெளியிட்ட இந்தக் கருத்து தொடர்பில் மிகுந்த விசனத்தை வெளிப்படுத்துவதற்கு பெப்ரவரி 25 ஆம் திகதி நடந்த சட்டத்தரணிகள் சங்கத்தின் பேரவைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது என்று சங்கத்தின் அறிக்கை கூறுகின்றது.

– சட்டரீதியான செயன்முறையில் தமது தேவையைப் பிரதிபலிக்கக்கூடியவாறான சட்டத்தரணியொருவரை தமது விருப்பத்தின்பேரில் தம்முடைய பிரதிநிதியாகத் தெரிவுசெய்யும் அடிப்படை உரிமை எந்தவொரு தனிநபருக்கோ அல்லது பொதுக்கட்டமைப்புக்கோ இருக்கின்றது.

அதேவேளை எந்தவொரு நீதிமன்றத்தின் முன்னிலையிலும் தமது சேவைபெறுநருக்கு அவசியமான சேவையை வழங்கும் கடமை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு உள்ளது.

இவை சட்டத்தின்முன் எந்தவொரு தனிநபரும் கொண்டிருக்கும் உரிமையும், சட்டத்தரணியொருவரின் தொழில் ரீதியான கடமையும், சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாத்தல் மற்றும் சட்டக் கட்டமைப்பின் முறையான இயக்கத்தை உறுதிசெய்தல் ஆகியவற்றுக்கு அவசியமான நடைமுறைகளும் ஆகும் – என்றும் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

– இலங்கையின் சட்டத்துறையின் சிரேஷ்ட உறுப்பினரொருவர் அவரது சேவைபெறுநரைப் பிரதிநிதித்துவப்படுத்தியமைக்காகத் தனிப்பட்ட தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவதும், நாட்டின் தலைவரால் – அரசியல் சட்டத்தரணி – என அழைக்கப்படுவதும் தீவிர கரிசனைக்குரிய விடயமாகும் – என்று சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் சங்கம், உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களை நடாத்துவது தொடர்பான வழக்கில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசி குறித்து நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட முன்னர் ஜனாதிபதி கருத்து வெளியிட்டமை தொடர்பிலும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.03.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 16 செவ்வாய்க்கிழமை 28.02.2022 கதிர் 347

## பெண்ணுக்குத் தொந்தரவு பொலிஸ் அதிகாரி கைது

பஸ்ஸில் பயணித்த பயிலுநர் தாதி ஒருவரின் உடலை ஸ்பரிசம் செய்த குற்றச்சாட்டில் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அளுத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை வலயத்துக்குட்பட்ட பொலிஸ் நிலையம் ஒன்றின் பலவின முறைப்பாடுகள் பிரிவின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் 54 வயதுடைய பிரதம பொலிஸ் பரிசோதகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடை நோக்கிப் பயணித்த பஸ்ஸில் பயணித்த பயிலுநர் தாதிக்கு குறித்த பொலிஸ் ☞2

# பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்பது நிதி திரட்டுவதற்கான கேவலமான முயற்சி

## நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் விளாசல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 28

காசு சேர்ப்பதற்காகத்தான் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று பொய் சொல்கிறார்கள். இது கோவலமான தொரு நடவடிக்கை என்று தெரி வித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

புளொட் அமைப்பின் தலைவரான சித்தார்த்தன் யாழ். கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று மாலை செய்தியாளர்களைச் சந்தித்தார். தலைவர் பிரபாகரன் தொடர்பில் பழநெடுமாறன் கூறிய கருத்து குறித்து செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். ☞2



## ரணிலைக் கொல்லச் சதியா?

### செய்தியே பொய் என்கிறது பொலிஸ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதாகவும் இது தொடர்பாகக் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாகவும் இணையத்தளமொன்றில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொல்ல வெளிநாட்டில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாகவும் அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்த குழுவொன்று வெளிநாடொன்றில் இதுதொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டதாகவும் தனியார் வானொலி ஒன்றின் இணையத் தளம் திடீரெனச் செய்தி வெளியிட்டிருந்தது.

மேலும், இரண்டு வார காலத்திற்குள் ஜனாதிபதியைக் கொல்ல அவர்கள் தீட்டிய திட்டம் கசிந்ததை அடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ☞2



## இரண்டாவது தடவையாகவும் இன்று தோற்றார் ஆனல்ட்

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வராக இரண்டாவது தடவையாகவும் இமானுவேல் ஆனல்ட் இன்று தோல்வியடைந்தார். அவரது வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் கிடைத்தன.

யாழ். மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் முதல்வர் ஆனோல்ட்டால் பெப்ரவரி 14ஆம் திகதி ஒரு தடவை தோற்கடிக்கப்பட்டது. ☞2



## அணு மின் உற்பத்திக்கு அமைச்சரவை அனுமதி

எதிர்கால எரிசக்தி தேவையை பூர்த்தி செய்ய அணுசக்தியை மாற்றாக கருத வேண்டும் என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இன்று இதனைத் தெரிவித்தார் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அணுசக்தியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக வழிநடத்தல் குழுவும் 9 பேர் கொண்ட செயற்குழுவும் நியமிக்கப்பட்டது. ☞2

## ரூபாய் 23 கோடி பெறுமதியான கொக்கேய்ன் இன்று மாட்டியது



### துபாயிலிருந்து வந்த யுவதியின் பொதியிலிருந்து பறிமுதல்

கொக்கேய்ன் எனப்படும் போதைப் பொருளை இலங்கைக்குக் கடத்தி வந்த பெண் ஒருவரை கட்டுநாயக்கா சுங்கப் பகுதி அதிகாரிகள் கைது செய்துள்ளனர். அவரது பொயிலிருந்து 23 கோடி 50 லட்சம் ரூபாய் பெறுமதியான கொக்கேய்னும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

துபாயில் இருந்து எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் விமானத்தில் இன்று காலை 8.30 ☞2

## அமைச்சர் அலி சப்ரி புதுடில்லிக்கு விஜயம்



புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ரைசினா உரையாடலின் எட்டாவது அமர்விலும், இந்தியாவின் புவிசார் அரசியல் மற்றும் புவி பொருளாதாரவியல் பற்றிய இந்தியாவின் முதன்மை மாநாட்டிலும் கலந்துகொள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மார்ச் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தில் ஈடுபடவுள்ளார்.

இந்த மாநாட்டை இந்திய வெளிவிவகார ☞2

## சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம்

### நாளை நடக்கும்; தேர்தல் நிதி தொடர்பிலும் ஆராயப்படும்



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாளை கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

அடுத்த வாரத்துக்கான ☞2

## மீண்டும் பிரதமர் பதவிக்கு மஹிந்த ஆசைப்படவில்லை

### ‘மொட்டு’க் கட்சி விளக்கம்

முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தலைவராகத் தொடர்ந்தும் செயற்படுகின்றார். அவர் மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்க விரும்பவில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் ☞2



## தெற்கில் இருவர் சுட்டுக் கொலை!



நாட்டின் இரு வேறு பகுதிகளில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் இருவர்சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்ததது.

அம்பலாங்கொடையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதை ☞2

## யாழ்ப்பாணத் தமிழரைப் பிரான்ஸில் கொன்று குப்பை மேட்டில் புதைப்பு

யாழ். மாவட்டம் மல்லாகத்தைச் சொந்த இடமாகக் கொண்ட சிவசுப்பிரமணியம் சபேசன் என்பவர் பிரான்ஸில் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது சடலம் குப்பை மேடடில் புதைக்கப்பட்ட நிலையில் ஞாயிற்றூக்கிழமை அந்த நாட்டுப் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சபேசனின் குடும்பத்தினர் மல்லாகத்திலேயே வாழ்கின்றனர். பிரான்ஸ் நாட்டில் தான் பணியாற் றும் வீட்டின் தொலைபேசி மற்றும் முகவரியை அவர் தனது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

சபேசனுடன் தொடர்புகொள்ள முடியாத நிலை யில் அவரது மனைவி அவர் பணியாற்றிய வீட்டிற்கு அழைப்பெடுத்துள்ளார், அப்போது சில நாட்களாகவே சபேசன் வேலைக்கு வரவில்லை என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இதனால் அச்சமடைந்த மனைவி இலங்கையில் உள்ள பிரான்ஸ் தூதரக அதிகாரிகளிடம் தனது ☞2

## மனோ – பிரிட்டன் குழு கொழும்பில் பேச்சு



### மலையகத் தமிழர்கள் பிரச்சினை குறித்து

மலையகத்தமிழரின் பிரதான எதிர்பார்ப்பு இந்நாட்டின் தேசிய நீரோட்ட அரசியல் வரைபுக்கு உள்ளே முழுமையான பிரஜைகளாக வேண்டும் என்பதாகும். சட்டப்படி நாடற்றோர் இன்று இல்லை. எல்லோருமே ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பிரபாகரன் உயிரோடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

பழநெடுமாறன் எங்களுடனும் மிக நெருக்கமாக இருந்தவர். அவர் கூறிய கருத்து தொடர்பில் அவரே பதிலும் வழங்கியிருக்கிறார். அதாவது யாரோ தனக்கு சொன்னார்கள் அதனை தான் சொன்னேன் என்றவாறாக அவரே கூறியுள்ளார்.

அவர் கூறியது தொடர்பில் அவரே தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பது போல சொல்லியுள்ளார். ஆனால் அவர்தான் உண்மையாகவே சொல்லியிருந்தார்.

இதில் உண்மையாக அவரை சொல்லச் சொல்லி சொன்னவர்கள் என்னுடைய அறிவுக்கெட்டிய வகையில் அல்லது கேட்டறிந்த அறிவு என்ற வகையில் இது சம்பந்தமாக சுவிஸ் நாட்டிலேதான் கூட்டம் வைத்துத் தொடங்கியுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் ஒரு பெண் மொட்டாக்கு போடப்பட்டு அழைத்து வரப்பட்டு இவர்தான் மதிவதனி என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த மதிவதனி இலண்டனில் இருக்கிறார் என்றும் அவருக்கு வாழ்வாதாரம் இல்லை என்றும் அவருக்கு காசு வழங்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

அதேபோன்று இன்னொருவரை யும் கூறி அது மகள் என்றும் அவரும் இலண்டனில் இருக்கிறார் எனவும் கூறப்பட்டுள்ளதுடன் அவருடன் கதைக்கலாம் என கூறியதன் அடிப்படையில் கதைத்த போதே அவர்கள் சொல்லியது பொய்; உண்மையில்லை என்பது தெரிய வந்துள்ளது.

பிரபாகரனின் மகள் என்று கூறப்பட்ட பெண்ணுடன் உரையாடிய பொழுது வாகனம் பழக்கியது யார் என்று கேட்டுள்ளனர். அதற்கு அந்தப் பெண் கூறிய பதிலில் உண்மை இருக்கவில்லை.

உண்மையில் பிரபாகரனின் மகளுக்கு பெண்கள் படையணியொன்றில் தான் வாகனம் பழக்கப்பட்டிருக்கிறது, பழகியவரும் யார் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கிறது.

இற்கமைய மகள் என்று அறிமுகப்படுத்தப்பட்ட பெண் பொய் சொல்வதை அறிந்து உடனடியாக இவை எல்லாம் உண்மையில்லை என பலருக்கும் தெரிவிக்கப்பட்டது.

இது எல்லாம் உண்மையில்லை முழுப் பொய் என்று கூறி நிதி சேகரிப்பும் முறியடிக்கப்பட்டது. ஆகவே என்னைப் பொறுத்தவரையில் இது வெறுமனே நிதி சேகரிப்பதற்கான ஒரு வேலையாகவே நான் பார்க்கிறேன். இந்தக் கூட்டத்திற்கு சென்றிருந்த சிலர் கூட இதனை எங்களிடத்தே சொல்லியிருக்கிறனர்.

ஆக இத்தகைய செயற்பாடுகள் மிக மிக கேவலமானதொரு செயற்பாடு ஆகும். மிகவும் மலினப்படுத்துகிற ஒரு விடயமாகவும் இருக்கிறது.

என்னைப் பொறுத்தவரைக்கும் தம்பி பிரபாகரன் மீது இப்பவும் பெரு மதிப்பு வைத்திருக்கிறேன். அதற்கு ஒரு பிரதான காரணமென்னவெனில் இந்தப் போராட்டத்திற்காக தன்னுடைய ஒட்டுமொத்தமான குடும்பத்தையுமே அர்ப்பணித்து தான் அவர் செயற்பட்டிருந்தார்.

அந்த அர்ப்பணிப்பு எல்லாத்தையுமே மலினப்படுத்தி வெறுமனே நாலுபேர் சீவிக்கிறதற்கு காசு சேர்ப்பதற்காக செய்கின்ற வேலை என்றுதான் கருதுகின்றேன் – என்றார்.

## ரணிலைக் கொல்லச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பான விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாகவும் அந்தச் செய்தி தெரிவித்தது.

ஆனால், அந்தச் செய்தி முழுப் பொய் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அவ்வாறான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் ஜனாதிபதியை கொலை செய்ய முயற்சிப்பதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் எந்தவொரு விசாரணைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெளிவுபடுத்தியுள்ளது.

## இரண்டாவது தடவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 நாள்களுக்குள் அது மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும் என்பது நியதி. அதன்படி கடைசி நாளான இன்று இரண்டாவது தடவையாகவும் வரவு – செலவுத் திட்டம் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் பதிவாகின. ஒருவர் நடுநிலை வகித்தார். 6 வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் மீண்டும் தோற்கடிக்கப்பட்டது.

இதன் மூலம் முதல்வர் ஆனோல்ட்டின் பதவி வெறிதாகியது. மார்ச் 19ஆம் திகதியுடன் சபையின் பதவிக் காலம் முடிவுக்கு வருகிறது.

## ரூபாய் 23 கோடி பெறுமதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு வந்து சேர்ந்த பெண்ணிடம் இருந்தே போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சிக்கியுள்ள கொக்கேய்ன் கலவையின் கொக்கேய்ன் செறிவு மிக அதிகமாக இருப்பதாகச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். இது உள்ளூரில் பயன்பாட்டுக்கு வரும்போது மேலும் நீர்த்துப்போகச் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டு அளவு பறிமுதல் செய்யப்பட்டதைவிட மிக அதிகமாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழுவினர் மேற்கொண்ட சோதனையின்போதே பெண்ணின் பையில் ஆடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கொக்கேய்ன் கைப்பற்றப்பட்டது என்று சுங்க ஊடகப் பேச்சாளர், பிரதி சுங்கப் பணிப்பாளர் (சட்ட விவகாரங்கள்) சுதத்த சில்வா தெரிவித்தார்.

## சபாநாயகர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான நிதியை விடுவிக்கக் கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவால் சபாநாயகருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் சம்பந்தமாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

## மீண்டும் பிரதமர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் மொட்டுக் கட்சிக்குள் எவ்வித கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்.

கட்சியைக் காட்டிக்கொடுத்துவிட்டு, அரசியல் ரீதியில் வங்குரோத்தடைந்துள்ள சன்ன ஜயசுமனவே, இப்படியொரு கருத்தை சமூகமயப்படுத்தினார். அதில் எவ்வித உண்மையும் இல்லை.

மஹிந்தவைப் பிரதமராக்க வேண்டுமென்றால் அதனை மக்கள் செய்வார்கள். கட்சிக்குள் அவருக்கு ஆதரவாளர்களும் உள்ளனர். எனினும், பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாக எவ்வித கலந்துரையாடலும் கட்சிக்குள் இடம்பெறவில்லை. தற்போதைய பிரதமருடன் எமக்கு சிறந்த நல்லுறவு உள்ளது – என்றார்.

## தெற்கில் இருவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, பாணந்துறையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

பிங்வத்த மயானத்துக்கு அருகில் இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

மேற்படி இரு சூட்டுச் சம்பவங்கள் தொடர்பிலும் பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணத் தமிழரைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணவன் குறித்த தகவல்களைப் பெற்றுத் தருமாறு கோரியிருக்கிறார். இதனடிப்படையில் சபேனைத் தேடிய பிரான்ஸ் பொலிஸார் அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

அவர் பணி புரிந்த வீட்டிலுள்ள ஏனைய பணியாளர்களிடம் விசாரணை நடத்தியும் அங்கிருந்த சிசிரிவி காணொலிகளைச் சோதனையிட்டும் பார்த்த பொலிஸார் சபேசன் வெட்டிக் கொல்லப்பட்டார் என்கிற உண்மையைக் கண்டுபிடித்தனர்.

வீட்டு உரிமையாளரைக் கைது செய்த பொலிஸார் அவரிடம் நடத்திய விசாரணையில் சபேனின் சடலம் குப்பை மேட்டில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

## அமைச்சர் அலி சப்ரி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச் சகத்துடன் கூட்டாகப் பார்வையாளர் ஆராய்ச்சி அறக்கட்டளை நடத்துகின்றது.

மேற்கண்ட மாநாட்டின் போது அமைச்சர் அலி சப்ரி இரண்டு சிறப்புக் குழு விவாதங்களில் பங்கேற்கத் திட்டமிட்டுள்ளார்.

## மனோ - பிரிட்டன் குழு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஜைகள். ஆனால், நமது மக்கள் முழுமையான பிரஜைகள் இல்லை. எமது பாதை உள்நோக்கிய பாதை. பிரிட்டன் இலங்கை அரசுடனான தமது நல்லுறவுகளை பயன்படுத்தி எமது இந்த இலங்கை கனவை நனவாக்க உதவ வேண்டும் என்று நேற்று கொழும்பில், வெஸ்ட்மின்ஸ்டர் இல்லத்தில் நிகழ்ந்த சந்திப்பின் போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

பிரித்தானிய வெளிவிவகார துணை பணிப்பாளர் மாயா சிவஞானம், பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், அரசியல் அலுவலர் ஜோவிடா அருளானாந்தம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்ட சந்திப்பின் போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு கூறினார்.

பிரிட்டன் தரப்பினரிடம், மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-

பிரித்தானியாவின் தார்மீக பொறுப்பு, பிரிட்டீஷ் அரசாட்சி, இம்மக்களை இருநூறு வருடங்களுக்கு முன்னர் தொடக்கம் தென்னிந்திய தமிழகத்திலிருந்து கொண்டுவர ஆரம்பித்ததுடன் ஆரம்பமாகிறது. அன்று முதல் எமது மக்கள், உலகம் கண்டிராத கடுமையான உழைப்பின் மூலம், இன்றுவரை மிகப்பெரிய ஏற்றுமதி தொழில் துறையாக இருக்கின்ற பெருந்தோட்டங்களையும், பெரும் நெடுஞ்சாலைகளையும், பாரிய ரயில் பாதைகளையும், கொழும்பு துறைமுகத்தையும் அமைத்து, அன்று சிலோன், இன்று ஸ்ரீலங்கா என்ற இலங்கையை உருவாக்கியுள்ளார்கள்.

இதற்கு பிரதியுபகாரமாக, நன்றிகெட்டத்தனமாக 1948இல் எமது மக்களின் குடியுரிமைதான் பறிக்கப்பட்டது. வாக்குரிமைதான் பறிக்கப்பட்டது. நமது மக்கள் பலவந்தமாக 1964இல் சிறிமா – சாஸ்திரி இலங்கை – இந்திய ஒப்பந்தம் மூலம் நாடு கடத்தப்பட்டார்கள். இது நடக்கும் போது, சிலோன் என்ற இலங்கை ஒரு பிரிட்டீஷ் ஆதிக்க நாடாக இருந்தது. 1972இல் குடியரசு ஆகும்வரை, இலங்கையில் பிரித்தானிய அரசாட்சிக்கு பதில் சொல்லும் மகாதேசாதிபதியே ஆட்சியில் இருந்தார். 1948இன் சோல்பரி அரசமைப்பின் 29ஆம் பிரிவும் எம்மை காப்பாற்றவில்லை. ஆகவே இன்றைய பிரிட்டீஷ் அரசரின் அரசாங்கம் இலங்கை மலையக தமிழரின் மீது பாரிய தார்மீக பொறுப்பையும், கடமையும் கொண்டுள்ளது.

இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் எமது பிரச்சினைகளை கையாளும் பொறுப்பை முழுமையாக விட்டு விட வேண்டாம். அது சரி வராது. இந்தியா ஏற்கனவே, இலங்கையுடனான தமது நட்புறவை எமது விடயத்திலும் அவ்வப்போது பயன்படுத்துகின்றது. ஆனால், அது எமக்கு போதாது. அவர்களுக்கு அவர்களது சொந்த தேசிய கரிசனைகள் அநேகம் உள்ளன. அவை எமது விடயங்களை விட முன்னுரிமை கொண்டவை. எமக்கு அவை தெரியும்.

தேசிய நீரோட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத காரணத்தால், நாம் ஒதுக்கப்படுகிறோம். எமக்கு பிரிட்டீஷ் உதவியும் தேவை. பிரிபடாத ஒரே இலங்கைக்குள் எமது சமூக – அரசியல் அபிலாகைளை அடையவும், கடந்த காலங்களில் இழந்த உரிமைகளை பெறவும் நாம் பாடுபடுகிறோம். எமது மக்கள் ஜனதொகையில் மூன்றிலொன்றுக்கு குறைவில்லாத பிரிவினர் இன்னமும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். ஒட்டுமொத்த இலங்கையில் மிகவும் பின்தங்கிய நலிந்த பிரிவினராக அவர்கள் இருக்கின்றார்கள்.

ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் நவீன கொத்தடிமை தொடர்பிலான விசேட அறிக்கையாளர், ஐ.நா. நிறுவனங்கள், உலக வங்கி, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியவை முன்வைத்துள்ள கணிப்பீடுகளின்படி, இந்த துன்பகரமான உண்மைகள் உலகறிய செய்யப்பட்டுள்ளன. ஆகவே பிரிட்டீஷ் அரசு, விசேட ஒதுக்கீட்டு திட்டங்களின் அடிப்படையில் பெருந்தோட்ட மக்களுக்கு உதவிட வேண்டும்.

நாங்கள் இந்நாட்டில் முழுமையான பிரஜைகள் ஆக உதவுங்கள். நம் நாட்டிற்கு நீங்கள் வாழ்வாதார உதவிகள் வழங்கும் போது, இலங்கையில் மிகவும் பின்தங்கிய நலிந்த பிரிவினரான, பெருந்தோட்ட பாமர மக்களுக்கு அவை கிடைகின்றனவா என கேள்வி எழுப்புங்கள். தேடுங்கள். எமக்காக இலங்கை அரசுடன் பேசுங்கள். நாம் இல்லாமல் இலங்கை முழுமையடையாது என்பது இனிமேல் மனதில் கொள்ளுங்கள் – என்றார்.

## பெண்ணுக்குத் தொந்தரவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார் என்று அந்தத் தாதி தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, சக பயணிகள் குறித்த பொலிஸ் அதிகாரியை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரை களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அணு மின் உற்பத்திக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குழுக்கள் தயாரித்த சுயமதிப்பீட்டு அறிக்கை தொடர்பாக சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனம் வழங்கிய பரிந்துரைகளின் பிரகாரம் அணுசக்தி உற்பத்தித் திட்டத்தை முன்னெடுக்கும் திறன் இலங்கைக்கு இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார் அமைச்சர். இதற்காக இதன்படி, அணுசக்தி சேதங்களுக்கான சிவில் பொறுப்புகள் தொடர்பான வியன்னா உடன்படிக்கை மற்றும் அணுசக்தி சேதங்களுக்கான கூடுதல் இழப்பீடு உடன்படிக்கை என்பவற்றில் இலங்கை கைச்சாத்திடவேண்டும்.

எனவே அது தொடர்பான மாநாட்டில் பங்கேற்பதற்காக அயலுறவுத்துறை அமைச்சர், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் ஆகியோர் முன்வைத்த கூட்டுப் பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது – என்றும் அமைச்சர் பந்துல தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நுவரெலியா பகுதி மாணவர்களுக்கு ஆஸி. அமைப்பு தொடர்ந்தும் உதவி

மலையகத்தைச் சேர்ந்த உதவி தேவைப்படும் மாணவர்களுக்கான கல்வி உதவிகள் இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டதாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இலங்கை மாணவர் கல்வி நிதியம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவிலிருந்து கடந்த 35 வருடகாலமாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் இந்த உதவி தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதாகவும் அந்த அமைப்பு தெரிவிக்கின்றது.

மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நிதிக்கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் இலங்கையில் வடக்கு – கிழக்கில் நீடித்த போரால் பெற்றோரை அல்லது குடும்பத்தின் மூல உழைப்பாளியை இழந்த தமிழ் மாணவர்களுக்கு உதவி வந்ததாக இந்த நிதியம் தெரிவிக்கின்றது.

2019ஆம் ஆண்டு முதல், மலையகத்தில் மண்சரிவு முதலான பேரிடர்களாலும் தந்தையை இழந்ததாலும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கும் தனது உதவியை விரிவாக்கியுள்ளதாக நிறுவனம் கூறுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் நானுஓயா நாவலர் கல்லூரி, டெஸ்ஃபோர்ட் தமிழ் மகா வித்தியாலயம், கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரி மற்றும் மகளிர் பாடசாலை **(Our Lady' School)**, தொடக்கநிலைப் பாடசாலை முதலானவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் நிறுவனம் தெரிவிக்கின்றது.

மலையக சமூக அபிவிருத்தி நிறுவனம் **(Plantation Community Development**



**Organization)** ஆஸ்திரேலிய அமைப்பின் இலங்கைத் தொடர்பாளர் அமைப்பாக இயங்கிவருகிறது.

இந்த அமைப்பு, மலையக தாய்மாருக்கானவிழிப்புணர்வு, பாடசாலைமாணவர்களுக்கான ஊக்கப்படுத்தல், முன்பள்ளி உதவிகள், பொதுப்பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுகளைத் தயார்ப்படுத்தல், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான கள ஆய்வுகள் முதலான வேலைத்திட்டங்களிலும் இயங்கிவருகின்றது.





# குமண காட்டில் குமுக்கன் காளிக்கு சண்டி ஹோமம்

(குமுக்கனிலிருந்து வேத சகா)

கிழக்கின் தென்கோடியில் உள்ள குமுக்கன் ஆற்றங்கரையில் சித்தர்களுக்கே காவல் சக்தியாக விளங்குகின்ற அன்னை மஹாகாளி தேவி சன்னிதியில், சண்டி ஹோமம் ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் முன்னிலையில் இடம்பெற்ற இம் பெரும் சண்டி ஹோமம் இந்த வரிசையில் நான்காவது. வேள்வி கிரியைகளை, இலங்கையின் பிரபல இணுவில் தர்ம சாஸ்தா குருகுல வேத வாத்தியார் சிவஸ்ரீ வத்சாங்க குருக்கள் தலைமையிலான நயினை நாகபூணி அம்மன் ஆதீன குருக்கள் வாமதேவ கைலாஸபானு குருக்களை உள்ளடக்கிய 10 சிவாச்சாரியார்கள் குழு எட்டு மணி நேரம் சிறப்பாக நிகழ்த்தியது. சிவாச்சாரியார்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்திருந்தனர். ஹோமத்துக்கான திரவியங்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டிருந்தன.

காலை 8 மணிக்கு சண்டி ஹோமம் தொடங்கியது. தொடர்ந்து இந்த பிரபஞ்சத்தில் ஆதாரமாக இருக்கும் 13 சக்திகளுக்கும் யாகத்தில் சிறப்பு பூஜைகள், 64 உபசாரங்கள் இடம் பெற்றன. மாலை 4 மணிக்கு பூர்ணாகுதி இடம் பெறுதலுடன் ஹோமம் நிறைவுக்குவந்தது.

குமண பறவைகள் சரணாலய வனத்துறை அதிகாரி பி.சமரநாயக்க பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். செய்தியாளர் வி.ரி.சகாதேவராஜா வெட்டி வேர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

# குட்டையில் குளிக்க முயன்ற சிறுவன் நீரில் மூழ்கி இறப்பு

(நூருள் ஹுதா உமர்)

குட்டையில் குளிக்க முயன்ற சிறுவன் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தான். சம்மாந்துறை, சென்னல் கிராமம் அறபா பள்ளிவாசல் பகுதியைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

அப்பகுதியில் கல்குவாரியினால் ஏற்பட்ட ஆழமான குட்டையில் நீர் நிரம்பியுள்ளது. அதில் குளிப்பதற்கு முயன்ற சமயமே சிறுவன் நீரில் மூழ்கினான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் இச்சம்பவம் இனியும் இடம்பெறக் கூடாது என்பதற்காக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தலை மையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம்.ஹனீபா, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.எம்.கபீர், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம். ஏ.கே. முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர்களான பீ.எம்.றியாழ், எஸ்.நளீம், முன்னாள் பிரதேச சபை உறுப் பினர் ஏ.சி.எம். சஹீல், மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல்.றாசீக், கிராம சேவை உத்தியோகத்தர் உள்ளிட்ட குழுவினருடன் குறித்த இடத்திற்கு இன்று திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்தக் குட்டையை மூடிவிடும்படி அப்போது மக்கள் அதிகாரிகளிடம் வலியுறுத்தினர். இதனை மூடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுவதற்காக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாக விசேட கலந்துரையாடல் நடத்தப்படும் என்று தெரிவித்தார் தவிசாளர்.

# கிழக்கில் தமிழர் கால்நடைகள் கொல்லப்படுவது தொடர் கதை

## குற்றவாளிகள் மீது நடவடிக்கை இல்லை என வளர்ப்பாளர்கள் கடும் விசனம்

மட்டக்களப்பு, பெப். 28

கிழக்கு மாகாணம் மயிலத்தமடுவில் தமிழர்களின் கால்நடைகள் தொடர்ச்சியாக வேண்டுமென்றே கொல்லப்படுகின்றன என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஓரிரு தினங்களுக்கு முன்னரும் இவ்வாறு ஒரு பசுமாடு சுட்டுக்கொல்லப்பட்டது என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன் தெரிவித்தார்.

அந்தப் பகுதியில் அத்துமீறி குடியமர்ந்துள்ள சிங்களவர்களே தமது மாடுகளைத் திட்டமிட்டுக் கொல்கின்றனர் என்று தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

“மயிலத்தமடுவில் காலம் காலமாக தமிழரின் பசுக் கள் அப்பகுதியில் அத்துமீறி குடியேறிய சிங்கள மக்களால் கொலை செய்யப்படுவது தொடர்கதையாக இருந்து வருகின்றது. ஓரிரு தினங்களுக்கு முன்பும் இவ்வாறான சம்பவம் ஒன்று நடைபெற்றது. பசுக்கள் துப்பாக்கிச் சுட்மடுக் கொல்லப்பட்டிருந்தன. நாடாளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தார். பின்னர் கரடியனார் பொலிஸ் நிலையத்திற்கும் சென்று பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக வாதாடினார்” என்று மயிலத்தமடு கால் நடை வளர்ப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் சி தியாகராஜா (விமலன்) தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது –

தமிழர்கள்மயிலத்தமடுவில் பூர்வீக காலம் தொட்டு கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார்கள் அவர்களுக்கு இதைத்தவிர வேறுமேய்ச்சல்தரை இல்லை. மயிலத்தமடுவில்அண்மைக் காலமாகச் விவசாயி



கள் என்ற போர்வையில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்களவர்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களுக்கு எதிராகக் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டபோது அவர்களை வெளியேற்ற வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதனை செயல்படுத்தும் பொறுப்பு மகாவலி அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டது. இன்று வரை அவர்கள் வெளியேற்றப்படவில்லை. இதனாலேயே முரண்பாடுகளும் குழப்பங்களும் தோன்றுகின்றன

கால்நடைகளை துப்பாக்கியால் சுட்டவர் யார் என்பதை அங்குள்ளசிங்களமக்களேஎமக்குக்கூறினார்கள். ஆனால், பொலிஸார் அப்பகுதிக்கு விசாரணைக்காக வந்தபோது அதே மக்கள் தமக்கு இதுபற்றி எதுவும் தெரியாதெனக் கை விரித்து விட்டார்கள். அதனால் துப்பாக்கியால் மாடுகளை சுட்ட நபர் கைது செய்யப்படவில்லை. இப்போது இந்த முறைப்பாடு செங்கலடி மத்தியஸ்த சபையிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாடுகள் கொலை செய்யப்படுவதும், குற்றவாளிகள் கைது செய்யப்படாமல் இருப்பதும் தமிர்களுக்கு பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் தலையிட்டும் கூட எதுவும் நடக்கவில்லை. தமிழர்களுக்கு இந்த நாட்டில் நீதி கிடைப்பதில்லை என்றார்.

# பள்ளிவாசலுக்கு ஜெனரேட்டர் கையளிப்பு

(நூருள் ஹுதா உமர்)

மட்டக்களப்பு, பெப். 28

சாய்ந்தமருது மஸ்ஜிதுல் குபாஃ பள்ளிவாசலின் தேவைக்கென ஜெனரேட்டர் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பள்ளிவாசர் நிர்வாகத்தினர் கல்முனையன்ஸ் போரத்திடம் கேட்டதற்கிணங்க இந்த ஜெனரேட்டர் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பள்ளிவாசலின்நீண்டநாள்தேவையாக இருந்துவந்த ஜெனரேட்டரை பள்ளிவாசல் நிருவாகத்தினரிடம் கையளிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை அஸர் தொழுகையைத் தொடர்ந்து பள்ளிவாசலில் இடம்பெற்றது.

# திருகோணமலையில் நெல் கொள்வனவு

அரசின் பெரும்போக நெல் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யும் நடவடிக்கை திங்கட்கிழமை தொடங்கியது.

உயர்ந்தபட்ச ஈரப்பதன் 14 வீதத்தை கொண்ட உலர்ந்த நெல் ஒரு கிலோ கிராம் 100 ரூபாவுக்கும் ஈரப்பதன் 14 வீத த்தைவிட கூடியதும் 22 வீதத்திற்கு குறைவான ஒரு கிலோ கிராம் நெல் 88 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும் என்று மாவட்டச் செயலர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

பட்டினமும் சூழலும், கந்தளாய், பதவியாபுர, சேருவல, குச்சவெளி மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட அரிசி ஆலைகள் மூலம் பிரதேச செயலக ஒருங்கிணைப்பின் கீழ் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படுகிறது.

நெல்லை கொள்வனவு செய்த அரிசி ஆலை உரிமையாளர்கள் அதனை அரிசியாக குற்றி பிரதேச செயலகத்திற்கு வழங்கவேண்டும். குறித்த அரிசி எதிர்வரும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வருமானம் குறைந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மாதமொன்றிற்கு ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ அரிசி என்றவாறு வழங்கப்படவுள்ளது.

# எழுத்தின் இயங்கியல் நூலுக்கு துரைவி விருது

2023ஆம் ஆண்டுக்கான துரைவி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இலக்கிய ஆய்வு நூலுக்கான விருது – எழுத்தின் இயங்கியல் என்ற ந.மயூரரூபனின் நூலுக்கு வழங்கப்பட்டது. இலக்கிய ஆய்வுக் கோட்பாடுகள் பற்றிய கட்டுரைகளை உள்ளடக்கியதாக இந்த நூல் இருந்தது. 2022ஆம் ஆண்டு இந்த நூல் வெளிவந்தது.

துரைவியின் 92ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருவுரையும், தெளிவத்தை ஜோசப் நினைவேந்தலும், துரைவி விருதுகள் வழங்கலும், ஜெயம் விருது வழங்கலும், சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடந்தது. எம்.வாமதேவன் தலைமை தாங்கினார். மேமன்கவி வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்வுகளைத் தொகுத்தும் வழங்கினார்.

தெளிவத்தை ஜோசப் நினைவேந்தல் உரையை மல்லியப்புசந்தி திலகர் ஆற்றினார். துரைவியின் 92ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரையை சிங்கள மொழியில் மலையகத் தமிழர்களின் பங்களிப்புக்கள் எனும் தலைப்பில் கலாநிதி கலா சந்திரமோகன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து துரைவி விருதுகள் வழங்கப்பட்டன. 2022 ஆம் வெளிவந்த இலக்கிய ஆய்வுக்கான நூலுக்கான விருதை ந. மயூரரூபன் பெற்றுகொண்டார். மொழிபெயர்ப்பு நூலுக்கான



விருது சிங்கள கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு நூலான இப்னு அஸுமத்தின் நீ கூறுகிறாய் இறந்துவிட்டாயாம் நீ என்ற நூலுக்கு வழங்கப்பட்டது. விருதினை இப்னு அஸுமத்தின் சார்ப்பாக வதிரி சி.ரவீந்திரன் பெற்றுகொண்டார்.

பெண் ஆளுமைக்கான ஜெயம் விருது அன்னலஷ்மி இராஜதுரைக்கு வழங்கப்பட்டது. நீண்ட காலமாக பத்திகைத்துறையிலும் இலக்கியத்துறையிலும் பங்காற்றி வரும் அவர் விருதைப் பெற்று கொண்டார். ஜெயம் விருதுக்கான ஏற்புரையை திருமதி அன்னலஷ்மி இராஜதுரை நிகழ்த்தினார். நன்றியுரையை ராஜ்பிராத் துரை விஸ்வநாதன் ஆற்றினார்.

# மக்களின் ஜனநாயக உரிமை திட்டமிட்டுப் புறக்கணிப்பு

## இப்படிச் சொல்கிறார் மகரூப் எம்.பி.

(ஹஸ்பர்)

தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுக்களைக் கோரி தேர்தலுக்குத் திகதியும் அறிவித்த பின்னர். ஜனாதிபதி மார்ச் 9 தேர்தல் நடைபெறாது என்பதாகச் சொல்கிறார். இவற்றை பார்க்கின்றபோது ஆட்சியாளர்கள் திட்டமிட்டு மக்களுடைய ஜனநாயகத்தையும், உரிமைகளையும் புறக்கணிப்பது தெரிகின்றது.

இவ்வாறுவியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி போதாத காரணத் தினால் தேர்தலை நடத்த முடியவில்லை என ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையின் வரலாற்றில் தேர்தல்கள் கடன்களைப் பெற்றேதான் இதுவரை நடத்தப்பட்டிருக்கின்றது. தேர்தல் நடவடிக்கைக்கான செலவுகள், அச்சு செலவுகள், பொலிஸ் செலவுகள் கடன் அடிப்படையிலேயே இடம் பெற்றிருக்கின்றன. அந்தப் பணத்தை தேர்தலுக்கு பின்னரே அரசாங்கம் செலுத்தி வந்திருக்கிறது. இப்போது மட்டும் ஏன் காசு தந்தால்தான் தேர்தல் என்று சொல்லப்படுகின்றது. வரவு செலவுத் திட்டத்தில் கூட தேர்தலுக்கு 10 பில்லியன் ஒதுக்கப்பட்டதாக சொல்லிவிட்டு தற்போது நிதியில்லை என்று சொல்வது பிழை – என்றார்.



# மாணவர் முதல்வர் சின்னம் சூட்டல்

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும், 2022 ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் திங்கட்கிழமை பாடசாலையின் அதிபர் எம்.ஐ.அப்துல் ரஸாக் தலைமையில் நடைபெற்றது.

தலைமை அதிதியாக கல்முனை முஸ்லிம் பிரிவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.பி.நஸ்மியா சனூஸ் கலந்து கொண்டார். மதிப்புறு அதிதியாக சம்பத் வங்கி நிந்தவூர் கிளை முகாமையாளர் எம்.கே. முஸம்மில் ஹூஸைன் பங்கேற்றார்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முடிவுரை எழுதப்பட்டு விட்டது

யாழ்ப்பாணம் மாநகர சபை வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. முதல்வர் இ.ஆனல்ட் இரண்டாவது தடவையாக முன்வைத்த இந்த வரவு – செலவுத் திட்டம் 6 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இந்தத் தோல்வி வெளியில் இருந்து பார்ப்பதற்கு ஆனல்ட்டின் தோல்வியாகத் தோன்றினாலும் தமிழ்க் கட்சிகள் பேசி வரும் ஒற்றுமை ஒற்றுமை என்கிற விடயத்தில் சவப்பெட்டிக்கு அடிக்கப்பட்ட கடைசி ஆணி அது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையில் பெறப்பட்ட ஆசனங்கள் 16. அவர்களில் ஒருவர் தற்போது மணிவண்ணன் தரப்பின் வேட்பாளராக மாறிவிட்டார். அதனால் மீதமிருந்த அவரது ஆதரவு இழக்கப்பட்டது.

அதேநேரம் தமிழ் அரசுக் கட்சியின் பெயரில் போட்டியிட்ட புளொட், ரெலோ ஆகிய இரு கட்சிகளின் சார்பிலும் தெரிவான உறுப்பினர்களின் எண்ணிக்கை 6. அவர்களில் ஒருவர் மட்டுமே இன்றைய தினம் ஆனல்ட்டுக்கு ஆதரவாக வாக்களித்தார். மற்றைய நால்வர் வாக்களிப்பைப் புறக்கணித்தனர். ஒருவர் நடுநிலை வகித்தார்.

நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் பங்காளிகள் தனித் தனியே கேட்பது என்கிற முடிவு எடுக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைவரத்தையே இந்த வாக்கெடுப்பு உணர்த்தி நிற்கின்றது.

ஆனல்ட் இரண்டாவது முறையாகவும் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வராகியபோதும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தனித் தனியே சந்திக்கும் நிலைக்கு நகர்ந்திருந்தன. ஆனால், அது குறித்து மாநகர சபையில் இருந்த அந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. அதுவும் வாய்த்துப்போக, வேறு சில எண்கணக்குகளும் சாதகமாக ஆனல்ட் இரண்டாவது தடவையாகவும் முதல்வரானார்.

அதன் பின்னர் புளொட் மற்றும் ரெலோ கட்சிகள் தங்கள் உறுப்பினர்களுக்குக் கிடுக்கிப் பிடி போட்டத்தைத் தொடர்ந்து ஆனல்ட்டின் வரவு செலவுத் திட்டம் இந்தக் கட்சிகளின் புறக்கணிப்பு மற்றும் எதிர்ப்புடன் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிகளான ரெலோவும் புளொட்டும் தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரு தெளிவான செய்தியை வழங்கியுள்ளன. தமிழ் அரசுக் கட்சி தங்கள் வழிக்கு வரவில்லை என்றால் அந்தக் கட்சி பழிவாங்கப்படும் என்பதே அந்தத் தெளிவான செய்தி. மாநகர சபை முடிவுகள் அதனையே காட்டுகின்றன.

இந்த அணுகுமுறையில் தமிழ் அரசுக் கட்சி கூறிவரும் தேர்தலுக்குப் பின்னர் தமது முன்னாள் பங்காளிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைப்பது என்கிற கதைக்கே இடமில்லை. அப்படி ஒரு ஏற்பாட்டுக்கு அந்தக் கட்சிகள் இணங்கிப் போவதானால் அதற்குரிய குறைந்தபட்ச சமிக்ஞையையாவது மாநகர சபையில் காட்டப்பட்டிருக்கும்.

முதலாவது வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்திருந்தாலும் இரண்டாவது வாக்கெடுப்பில் நிபந்தனை ஆதரவு என்கிற வகையிலான ஏதாவது ஒரு சமிக்ஞை வெளிப்படுத்தப்பட்டிருக்கும். அப்படி எதுவும் நடக்கவில்லை. எனவே இந்தக் கட்சிகள் இனிவரும் காலங்களில் சேர்ந்து இயங்குவதற்கான ஏது நிலை இல்லை என்பது இப்போதே தெட்டத் தெளிவாகிவிட்டது.

இனிவரும் தேர்தல்களிலும் எந்தவொரு கட்சியும் உள்ளூராட்சி சபைகளில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறப்போவதில்லை. தொங்கு சபைகளே அமையும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. அத்தகைய நிலையில் இன்று தம்மை கைவிட்ட, பழிவாங்கிய தமது முன்னாள் பங்காளிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு தமிழ் அரசுக் கட்சியும் தயாராக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. தமிழ் அரசுக் கட்சி பிரிந்து போய்விட்டது என்பதால் இன்று அந்தக் கட்சியைத் தண்டித்தவர்கள் நாளை அதனைத் தண்டிக்காமல் அதனுடன் இணைந்துபோவார்கள் என்று எதிர்பார்க்கவும் முடியாது. அப்படிச் செய்தார்களானால் மக்கள் ஓட ஓட அவர்களை அடித்து விரட்டுவார்கள் என்பது சர்வநிச்சயம்.

இத்தகைய பின்னணியில் இனிவரும் காலங்களில் ஒற்றுமை என்பதற்கான வாய்ப்புக்களுக்கு மாநகர சபை மூலம் முழுமையான முடிவு கட்டப்பட்டுவிட்டது. இனிமேல் இவர்கள் சேர்ந்து பயணிக்கிறோம் என்றால் அது மக்களை முட்டாள்களாக்கி, வாக்குகளைச் சூறையாடுவதற்கான தந்திரம் மட்டுமே தவிர வேறில்லை மக்களே!

# அற்பத்தனமாக செயற்படுகின்றனர் அரசியல்வாதிகள் – சந்திரிகா காரசாரம்



நாட்டில் இன்றைய அரசியல்வாதிகள் மிகவும் அற்பத்தனமாக செயற்படுகின்றனர். எனினும், நாட்டை பொறுப்பேற்கக்கூடிய ஆற்றல்கொண்ட இளம் சமுதாயம் உருவாகும் காலம் வெகு தூரத்தில் இல்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை நான் ராஜபக்ஷக்களிடம் ஒப்படைத்துவிட்டு சென்ற காலம் தொடக்கம் இன்று வரையில் கட்சியில் இருந்தவர்கள் கட்சியை இல்லாமல் செய்துள்ளனர்.

ராஜபக்ஷவின் பின்னர் தற்போது கட்சியின் பொறுப்பை மைத்திரியிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அவரும் கட்சியை இல்லாமல் செய்துள்ளார்.

இருந்தபோதிலும் நாட்டு மக்கள் என்னை சாடாமல் இருப்பது வியப்பாகவுள்ளது. ராஜபக்ஷர்களை விரட்டுவதற்காக மைத்திரியை கொண்டு வந்ததற்கு என்னையே நீங்கள் குற்றம் சுமத்தவேண்டும். இன்று நாடும் கட்சியும் இவ்வாறு இருக்க இவரும் ஒரு காரணமாவார்.

மைத்திரி பொருத்தமற்றவர். மைத்திரி பதவிக்கு வந்த பின்னர் அவருக்கு பைத்தியம் பிடிக்கும் என்று எனக்குத் தெரியாது.

மைத்திரபால சிறிசேன நாட்டை வங்குரோத்து அடையச் செய்துள்ளார். அதேபோன்று கட்சியையும் வங்குரோத்து அடைய செய்துள்ளார்.

நாங்கள் எல்லோரும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளோம். அன்று இனிமேலும் ராஜபக்ஷர்களுடன் இணைந்து செல்ல வேண்டாம் என்று கூறினேன்.

இதைக் கூறியதையடுத்து கட்சியில் இருந்து நீக்கப்பட்டேன்.

எனக்கு நண்பர்களை விட நாடுதான் முக்கியம். ஆனால் எனது கட்சியே அதற்கு தடையாக இருந்தால் நாட்டை முன்னேற்ற கட்சியை மறக்க வேண்டும். தற்போது எங்களால் முடிந்த வரை கட்சியுடன் இணைந்து செயற்படுகிறோம். – என்றார்.



## ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு கூட்டமைப்பு உறுப்பினருக்கும் விருப்பமாம்

கொழும்பு, பெப். 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட 56 கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்பட கலந்துரையாடி வருகின்றனர் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது–

ஐக்கியதேசியகட்சியில் இருந்து பிரிந்து சென்று புதிய கட்சிகளை உருவாக்கியவர்கள் ஒருபோதும் நிலைத்திருக்கவில்லை.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, லலித் அத்துலத் முதலி, ருக்மன் சேனாநாயக்க, காமினி திஸாநாயக்க என பிரிந்து சென்ற எவரும் வரலாற்றில் நிலைத்திருக்கவில்லை. அதேநிலைதான் தற்போது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடம்பெறப்போகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி தற்போது பல குழுக்களாகப் பிளவுபட்டிருக்கிறது. பொன்சாகா அணி, ராஜித்த அணி, சம்பிக்க அணி என பிளவு பட்டிருக்கிறது. இவர்களை ஒன்றிணைப்பதற்கு சஜித் பிரேமதாஸவுக்கு ஆளுமை இல்லை.

அதனால் அவர் கட்சிக்குள் இருக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு லக்ஷ்மன் கிரியெல்லவிடம் பொறுப்புக்கொடுத்துவிட்டு, நாடுபூராகவும் பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

அடுத்த பொதுத் தேர்தலிலாகும்போது ஐக்கிய மக்கள் சக்தியில் சஜித் பிரேமதாஸவும், லக்ஷ்மன் கிரியெல்லவும் மாத்திரமே இருப்பார்கள்.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்தும் வேலைத் திட்டம் இடம்பெற்று வருகிறது. வடக்கு மாகாணத்திலும் கட்சியை பலப்படும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

இதனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் பலரும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

இதுவரை 56 கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஐக் கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட முன்வந்திருக்கின்றனர். இதில் ஐக்கிய மக்கள் சக்தி, பொது ஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களும் இருக்கின்றனர். – என்றார்.

## புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் செயற்பாட்டிலுள்ளது!

### அமெரிக்கா பரபரப்புத் தகவல்

விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் செயற்படுகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தொண்டு நிறுவனங்களை பயன்படுத்தி நிதிதிரட்டி தமது செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துகின்றனர் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா நேற்று (திங்கட்கிழமை) வெளியிட்ட பயங்கரவாதம் தொடர்பான 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 இல் இலங்கை அரசாங்கத்தால் இராணுவரீதியில் தோல்வியடைந்த போதிலும் விடுதலைப் புலிகளின் சர்வதேச ஆதரவாளர்கள் வலையமைப்பும் நிதி ஆதரவும் தொடர்கின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

2009 முதல் விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்பாடின்றி உள்ளது. 2009 ஆம் ஆண்டின் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் எந்த தாக்குதல்களும் இல்லை எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம் - தென்மராட்சி - மீசாலை வடக்கு வேம்பிராயில் அமைந்துள்ள கலட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் இரண்டு உண்டியல்கள் உடைத்துப் பணம் திருடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றதாக நிர்வாகத்தினரால் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சவூதியுடன் உறவுகள் மேம்படும்: அலி சப்ரி நம்பிக்கை



சவூதி அரேபியாவுடனான நீண்டகால உறவுகள் வலுவாக மேம்படும் என்று எதிர்பார்ப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி, சவூதி தூதுக்குழுவினரை சந்தித்த பின்னர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் கடந்த மாதம் ஐக்கிய ராஜ்யத்துக்குப் பயணம்செய்தார். அதன்போது இரண்டு நாடுகளுக்கிடையேயான பொருளாதார மற்றும் எரிசக்தி ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வழிகள் தொடர்பாக சவூதி இளவரசர் பைசல் பின் ஃபர்ஹானுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்த நிலையில், நேற்றைய தினம் இடம்பெற்ற கூட்டத்தின்போது, இலங்கையில் திட்டங்களுக்குத் தொடர்ந்து நிதி உதவி வழங்குவதாகச் சவூதி அரசு உறுதியளித்துள்ளது.

இதுவரை, இலங்கைக்கு 42 கோடியே 50 லட்சம் டொலர் மதிப்புள்ள குறைந்தது 15 அபிவிருத்தி கடன்களைச் சவூதி வழங்கியுள்ளது.

அத்துடன், கிழக்கு இலங்கையில் ஒரு பாலம் நிர்மாணிக்க 54 லட்சம் டொலர்களை சவூதி வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வழக்கு ஒத்திவைப்பு

ஜனவரி 15 ஆம் திகதி பொங்கல் விழாவிற்காக யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நல்லூரில் நடத்தப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் மே மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இந்தப் போராட்டத்தின்போது பொலிஸாரைத் தாக்கினார்கள், கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வேலன் சுவாமிகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் வவுனியா மாவட்ட உறவினர் சங்கச் செயலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. மேலும் சில சந்தேக நபர்களை வழக்கில் இணைக்கப்படவிருப்பதாகப் பொலிஸார் அறிவித்தனர். பதில் நீதிவான் தவபாலன் வழக்கை மே மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## நெல்கொள்வனவுக்கு ரூ. 10 கோடி முல்லை மாவட்டத்துக்கு ஒதுக்கீடு

அரசின் நெல் கொள்வனவு திட்டத்துக்கமைய முல்லைத்தீவில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதற்கு சுமார் 10 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் கொள்வனவு இடத்தைத் திறந்து வைத்தல் மற்றும் விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்தல் நிகழ்வு திங்கட்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கணுக்கேணி கிழக்கில் அமைந்துள்ள ரவி அரிசி ஆலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாவட்டச் செயலர் க.விமலநாதன், நெல் கொள்வனவு இடத்தைத் திறந்து வைத்து விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவை தொடக்கி வைத்தார்.

இந்த நெல் கொள்வனவு நேரடியாகப் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படுகிறது. பிரதேச செயலாளருக்கும் நடுத்தர மற்றும் சிறிய ஆலை உரிமையாளருக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன்படி அவர்கள் நெல்லைக் கொள்வனவு செய்து அரிசியாக்கிக் கொடுப்பார்கள்.

ஒரு கிலோ பச்சை நெல்லை அரிசியாக்குவதற்கு 7 ரூபாவும், அவியல் நெல் ஒரு கிலோ அரிசியாக்குவதற்கு 9 ரூபா 50 சதமும் அரிசி ஆலை உரிமையாளருக்கு வழங்கப்படும் 10 கிலோ அரிசி பொதி ஒன்றுக்கு 50 ரூபாவும் ஆலை உரிமையாளருக்கு வழங்கப்படும்.

இந்த 10 கிலோ அரிசி பொதி முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் வறுமையில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளர்களுக்குப் பங்குனி மாதம் 10 கிலோ, சித்திரை மாதம் 10 கிலோ என்ற அடிப்படையில் இலவசமாக அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# பள்ளி மாணவிகளுக்கு விசம் வைத்து ஈரானில் அடிப்படைவாதிகள் கொடூரம்

ஈரானில் பள்ளிக்குச் செல்லும் மாணவிகளை தடுப்பதற்காக மத அடிப்படைவாதிகள் சிலர் அவர்களுக்குத் தெரியாமல் விசம் கொடுத்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் அங்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள கோம் பகுதியில் கடந்த மூன்று மாதங்களாகப் பள்ளிக்குச் செல்லும் மாணவிகளுக்கு தொடர்ந்து உடல்நலம் பாதிக்கப்பட்டு வந்தது.

வயிற்றுவலி, தலைவலி, வாந்தி, மூச்சு விடுவதில் சிரமம் போன்வற்றால் பாதிக்கப்பட்ட மாணவிகளில் சிலர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பரிசோதனையில் அவர்கள் உடலில் நஞ்சு இருந்தது தெரிந்தது. மாணவிகளுக்கு அவர்களது உணவு அல்லது குடிபானத்தில் கொஞ்சம் கொஞ்சமாக விசம் கலக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று மருத்துவத் துறையினர் கருதுகின்றனர்.

மாணவிகளுக்கு விசம் கொடுக்கப்பட் டுள்ள தகவலை ஈரான் கல்வித்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. இப்படி அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கோம் பகுதியில் உள்ள தீவிர மத வாதிகள் மாணவிகள் பள்ளிக்கு செல்வதை தடுப்பதற்காக விசம் வைத்து இருக்கலாம் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக ஈரானில் மாஷா அமினி என்ற இளம்பெண்ணின் இறப்பைத் தொடர்ந்து கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டம் தீவிர மடைந்தது. மூன்று மாதங்களுக்கும் மேலாக நடந்த இந்தப் போராட்டத்தில் 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந் தனர். 15,000 பேர் வரை கைது செய்ய ப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு ஈரான் தூக்குத் தண்டனை அறிவித்தது. ஆனால், இவற்றின் அதிகாரபூர்வ எண் ணிக்கை இதுவரை தெரியவில்லை.

மேலும், போராட்டக்காரர்களில் 400 பேருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்வினையாக ஐநாவின் பெண்கள் அமைப்பில் இருந்து ஈரான் நீக்கப்பட்டது.

இந்த நிலையில் ஈரானில் பள்ளிக்கு செல்லும் மாணவிகளுக்கு விசம் வைக்கப்பட்டது அனைத்துத் தரப்பினருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# வடகொரியாவில் உணவுப் பஞ்சம் தீவிரம்

வட கொரியாவில் கடும் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து விவசாய உற்பத்தியில் தீவிர மாற்றத்தைக் கொண்டுவரும்படி அதிபர் கிம் அழைப்பு விடுத்துள்ளார்.

வடகொரியா ஒரு மூடு மந்திர நாடு என்பதால் உள்ளே என்ன நடக்கின்றது என்பது அபூர்வமாகத்தான் வெளியே தெரியவரும். இந்நிலையில், வட கொரியாவில் உணவுப் பஞ்சம் நிலவுவதாக கடந்த சில ஆண்டுகளாகவே தகவல்கள் கசிந்தன. இதையும் வட கொரியா மறைக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வட கொரியாவில் உணவுப் பஞ்சம் ஏற்பட்ட தகவலை அதிபர் கிம் வெளிப்படையாக கடந்த 2021ஆம் ஆண்டு ஒப்புக் கொண்டார். தற்போது வட கொரியாவில் நிலைமை மோசமடைந்து வருகிறது.

உணவு தட்டுப்பாட்டிலிருந்து மீளவும், நாட்டின் பொருளாதாரத்தை மீட்கவும் தற்சார்பு பொருளாதாரம் அவசியம் என்றும், வெளிநாடுகளிலிருந்து உணவுகளை இறக்குமதி செய்வது விச மிட்டாய்களுக்கு சமம் என்றும் கிம் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில், அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பை நடத்திய அதிபர் கிம், தானிய உற்பத்தி இலக்குகளை அடைவதன் முக்கியத்துவத்தையும், விவசாய உற்பத்தி செயல்முறையை மாற்றுவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில்ல்கி ம், "நாம் விவசாய உற்பத்தி சார்ந்து தீவிர மாற்றத்தை கொண்டுவர வேண்டும். ஒன்றுபட்ட தலைமை அமைப்பு இருக்கும் வரை இங்கு எதுவும் சாத்தியமில்லை" என்று தெரிவித்திருக்கிறார்.

கடந்த மாதம் அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயல்படும் சிந்தனை அமைப்பு (think tank) வெளியிட்ட அறிக்கையில், "வட கொரியாவின் 2020-21 விவசாய அறுவடையானது, குறைந்தபட்சம்கூட தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறியிருக்கலாம். அதனால்தான் பஞ்சம் ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டிருந்தது.

வட கொரியா உணவு பஞ்சத்துக்கு உள்ளாவது இது முதல்முறை அல்ல. 1990களில் வட கொரியாவில் கடுமையான உணவு பஞ்சம் ஏற்பட்டது. இந்தப் பஞ்சத்தில் 2,40,000 பேர் வரை உயிரிழந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

# கொரோனாவின் மூலம் எது? சீனாவிடம் கேட்கும் அமெ.

உலகப் பெருந் தொற்றான கொரோனா வைரஸின் மூலம் எது என்பது தொடர்பில் சீனா நேர்மையாக இருக்கவேண்டும் என சீனாவுக்கான அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.



சீனாவின் வுஹான் நகரிலுள்ள ஆய்வு கூடமொன்றி லிருந்து கொரோனா வைரஸ் வெளிவந்திருக்கலாம் என அமெரிக்காவின் உளவு அமைப்பு ஒன்றின் இரகசிய அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இந்தச் செய்தி வெளியாகி ஒரு நாளின் பின்னர் சீனாவுக்கானஅமெரிக்கத் தூதுவர் நிக்கலஸ் பேர்ன்ஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

ஆனால், ஆய்வுகூடத்திலிருந்து கொரோனா வெளிவரவில்லை எனச் சீனா திரும்பத் திரும்பக் கூறுகிறது.

இந்த வைரஸ் பரவல் தொடர்பில் அமெரிக்கப் புலனாய்வு நிறுவனங்களிடையே வித்தியாசமான கருத்துகள் உள்ளன. கொரோனா வைரஸ் இயற்கையாக மனிதர்களுக்கு தொற்றியிருக்கலாம்என அமெரிக்காவின் 6 தேசிய புலனாய்வு நிறுவனங்களில் 4 நிறுவனங்கள் கருதுகின்றன. ஆனால், இந்த வைரஸ் ஆய் வுகூடத்திலிருந்து வெளிவந்திருக்கலாம் என தான் நம்புவதாக 2021ஆம் ஆண்டு எவ்பிஐ கூறியிருந்தது. இது தொடர்பில் உறுதியான தீர்மானம் இல்லை என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு பேச்சாளர் ஜோன் கேர்பி திங்கள் கிழமை கூறியிருந்தார்.

கொரோனா வைரஸ் மூலம் பரவும் கொவிட்19 தொற்று நோயினால் உலகில் இது வரை சுமார் 68 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர்.

# சீன அமைச்சர் இந்தியா வருகிறார்

இந்தியாவில் நடைபெற உள்ள ஜி20 நாடுகளின் அயலுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்க சீன அயலுறவு அமைச்சர் கின் காங் இந்தியா வர உள்ளார். ஜி20 நாடுகளின் அயலுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு வரும் மார்ச் 2ஆம் திகதி புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இதில், பங்கேற்க ஜி20 நாடுகளின்



வெளியுறவு அமைச்சர்கள் உள்பட பல்வேறு நட்பு நாடுகளின் அயலுறவு அமைச்சர்களுக்கு வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், அவரது அழைப்பை ஏற்று சீன அயலுறவு அமைச்சர் கின் காங் புதுடெல்லி வர உள்ளார். இதனை அந்நாட்டு அயலுறவு அமைச்சகம் உறுதிப்படுத்தி உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் சீன அயலுறவு அமைச்சர் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பயணம் என்பதால் இது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

கெரோனா பெருந்தொற்று காரணமாக 2020இல் சீன அமைச்சர்கள், உயரதிகாரிகள் உள்ளிட்டோர் வெளி நாடுகளுக்குச் செல்வது தவிர்க்கப்பட்டது. இந்நிலையில், இந்திய - சீன எல்லையில் கடந்த 2020 ஏப்ரலில் ஏற்பட்ட படைக் குவிப்புக் காரணமாக இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் அதிகரித்தது. இரு நாடுகளுக்கு இடையே போர் நிகழலாம் என்றும் கருதப்பட்டது. இதன் காரணமாக, சீன அமைச்சர்கள் யாரும் இந்தியாவுக்கு வரவில்லை

# உக்ரைனில் கூட்டுப்படை தளபதி பதவி நீக்கம்



உக்ரைன் கூட்டுப் படைகளின் தளபதி எட்வர்ட் மைக்கைலோவிச் மொஸ்கலோவ் என்பவரை அதிரடியாக நீக்கி, அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கி உத்தரவிட்டுள்ளார்.

இந்த திடீர் பதவி நீக்கத்துக்கான காரணம் எதையும் அவர் தெரிவிக்கவில்லை.

ரஷ்யா – உக்ரைன் போர் தொடக்கியபோது கடந்த ஆண்டு மார்ச் மாதம் உக்ரைன் கூட்டுப் படையின் தளபதியாக எட்வர்ட் மைக்கை லோவிச்மொஸ்கலோவ் நியமிக்கப்பட்டார்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் கடந்த சில மாதங்களாகவே உயரதிகாரிகளை தொடர்ந்து பணி நீக்கம் செய்து வந்தார் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி. அந்த வகையில் மொஸ்கலோவ்வும் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சூழலில் உக்ரைனுக்கு பயணம் செய்த சவுதி வெளியுறவுத் துறை ஃபர்கான் அல் சவுத் சுமார் 400 மில்லியன் டொலர் உக்ரைனுக்கு உதவியாக வழங்குவதாக அறிவித்தார். சவுதி – உக்ரைன் இடையேயான உறவில் இது மிக முக்கிய நகர்வு என்றும், உண்மையான உதவியை சவுதி செய்துள்ளது என்றும் உக்ரைன் தெரிவித்துள்ளது.

முன்னதாக, தங்களுக்கு மேற்கத்திய நாடுகள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் உக்ரை னின் வெற்றி தவிர்க்க முடியாதது என்று அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்திருந்தார்.

# லோகோவை மாற்றிய நோக்கியா

ஒரு காலத்தில் கைப்பேசிகளின் நாயகனாக இருந்த நோக்கியா நிறுவனம் சுமார் 45 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக தனது வர்த்தகக் குறியீட்டை (லோகோ) மாற்றியிருக்கிறது.

10 ஆண்டுகளுக்கும் மேலாக, நோக்கியா நிறுவனம் திறன்பேசி வணிகத்தில் எடுபடாமலேயே இருந்துவிட்டது. லோகோவை மாற்றியிருக்கும் நோக்கியா, டெலிகாம் கருவிகளின் உற்பத்தியாளர் பிரிவில் தொடர் வளர்ச்சியில் கவனம் செலுத்தவுள்ளது. பாரம்பரியமாக நமது பழைய லோகோ அமைந்திருந்தது. ஆனால் மாறி வரும் உலகத்துக்கு ஏற்ப புதிய லோகோ வடிவமைக்கப் பட்டுள்ளது.

# துருக்கியில் மீண்டும் நிலநடுக்கம்

துருக்கியில் திங்கள்கிழமை மீண்டும் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இது குறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது: நாட்டின் தெற்குப் பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்சர்ட அளவு கோலில் இந்த நிலநடுக்கம் 5.6 அலகுகளாகப் பதிவானது. ஏற்கெனவே முந்தைய நிலநடுக்கத்தால் சேதமடைந்திருந்த 24க்கும் மேற்பட்ட கட்டடங்கள் இந்த புதிய நிலநடுக்கத்தில் இடிந்து விழுந்தன. இதில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார் 69 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிரியா எல்லையையொட்டிய துருக்கியின் காஸியான்டெப் நகரில் பெப்ரவரி 6ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 7.8 அலகுகளாகப் பதிவானது. அதில் துருக்கியிலும் சிரியாவிலும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர்.

இந்த நிலையில், அடுத்தடுத்து ஏற்பட்டு வரும் நிலநடுக்கங்களும் புதிய உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

நிலநடுக்கத்தின் பின்னதிர்வுகள் தொடர்வதால், ஏற்கெனவே சேதமடைந்துள்ள கட்டடங்களுக்குள் பொதுமக்கள் செல்ல வேண்டாம் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர் .



# மைதானத்தில் பொழிந்த டெடி பியர் மழை

துருக்கியின் பெசிக்டாஸ் நகரில் நடந்த கால்பந்தாட்ட போட்டியின்போது பூகம்ப பாதிப்பால் பாதிக்கப்பட்ட குழந் தைகளுக்கு டெடிபியர்களை பார்வை யாளர் கள் மைதானத்தில் தூக்கி எறிந்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.


பெப்ரவரி 6ஆம் திகதி சிரியா – துருக்கி எல்லையில் மிகவும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. 7.8 ரிச்டராக பதிவான அந்த நிலநடுக்கம் ஏற்படுத்திய தாக்கத்தால் இதுவரை துருக்கி மற்றும் சிரியாவில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந் திருக்கின்றனர். நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட சிரியா – துருக்கி நாடுகளுக்கு உலக நாடுகள் நிவாரண மற்றும் மீட்பு பணி உதவிகளைச் செய்தன. நிலநடுக்கப் பாதிப்பிலிருந்து இரு நாடுகளும் மெல்ல மீண்டு வருகின்றன.

இந்த நிலையில்தான் துருக்கியின் பெசிக்டாஸ் நகரில் உணர்வு பூர்வமனான சம்பவம் நடந்துள்ளது.

துருக்கியில் உள்ளூர் கால்பந்து கிளப் போட்டிகள் நடந்து வருகிறது. இதில் திங்கட்கிழமை நடந்த போட்டியில் பெசிக்டாக்ஸ் – ஆண்டலியாஸ்போர் அணிகள் மோதின. இரு அணிகள் இடையே நடந்த போட்டி 4 மணி 17 நொடிகளுக்குப் பிறகு நிறுத்தப்பட்டது ( பெப்ரவரி 6 ஆம் தேதி 4.17 மணியளவில்தான் துருக்கி – சிரிய எல்லை நிலநடுக்கம் ஏற்பட்டது) அப்போது அங்கு கூடியிருந்த ரசிகர்கள் தாங்கள் கொண்டு வந்த டெடி பியர் பொம்மைகளை மைதானத்தில் தூக்கி எறிந்தனர். இதனால் அங்கு டெடி பியர் மழை பொழிந்தது. இந்த பொம்மைகள் அனைத் தும் நிலநடுக்கத் தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்று பெசிக்டாஸ் அணி தெரிவித்துள்ளது.

# இத்தாலி படகு விபத்து உயிரிழப்பு 62 ஆகியது

இத்தாலியில் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்துள்ளது.



இத்தாலியின் தெற்கு கடல் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை கவிழ்ந்த படகில் 150க்கும் மேற்பட்ட அகதிகள் இருந்தனர் என்று கூறப்படுகிறது. படகு நடுக்கடலில் பாறையில் மோதி கவிழ்ந்து உடைந்ததில், அதன் சிதறல்கள் அப்பகுதி கடற்கரையில் ஒதுங்கின.

இதில் உயிரிழந்த மேலும் சிலரது உடல்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து இறந்தோர் எண்ணிக்கை 62ஆக உயர்ந்துள்ளது. முன்னதாக, விபத்தில் சிக்கிய 27 பேர் நீந்திக் கரை சேர்ந்தனர். 20க்கும் மேற்பட்டோரை இத்தாலி கடலோரக் காவல் படையினர் மீட்டனர்.

இந்த விபத்தில் பலர் மாயமாகியுள்ளதால், இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

விபத்தில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள். இது தவிர, பாகிஸ்தான், ஈராக் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்களும் விபத்துக்குள்ளான படகில் இருந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



## இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து மீண்டு வந்து

# இங்கிலாந்து அணியை பதற வைத்த நியூசி.

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி, போஃலோ ஒன் பெற்றும்கூட, ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இந்தத் தொடரின் முதல் டெஸ்டை இங்கிலாந்து வென்ற நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டி வெலிங்டன் மைதானத்தில் நடைபெற்றது. போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

தொடக்கத்தில் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து இங்கிலாந்து அணி தடுமாறிய நிலையில், ஜோடி சேர்ந்த ஜோ ரூட், ஹரி புருக் இருவரும் அதிர டியாக விளையாடி சதங்களை எடுத்து அசத்தினார். இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுகளை இழந்து 435 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் தனது இன்னிங்சை நிறைவுசெய்தது.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்சில் நியூசிலாந்து விளையாடியது. இதில் வில்லியம்சன் 4 ஓட்டங்களிலும், வில் யங் ஓட்டங்களிலும், கொன்வே ஓட்டமெதனையும் பெறாது அவுட்டாகியும் அடுத்தடுத்து வெளியேறினர். இறுதியில் டிம் சௌதி அதிரடியாக விளையாடி 49 பந்துகளில் 73 ரன்கள் சேர்த்தார். நியூசிலாந்து அணி 209 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

226 ஓட்டங்கள் பின்னிலையிலிருந்த நியூசிலாந்து அணியை போஃலோ ஒன் அடிப்படையில் மீண்டும் துடுப்பெடுத்தாட அழைத்தது இங்கிலாந்து. இன்னிங்ஸ் வித்தியாசத்தில் நியூசிலாந்தைச் சுருட்டிவிடலாம் என்று நினைத்த இங்கிலாந்துக்கு, அந்த அணியின் வீரர்கள் அதிர்ச்சி வைத்தியம் அளித்தனர்.

முதல் விக்கெட்டுக்கு டொம் லதாதம் – கொன்வே ஜோடி பொறுமையாக விளையாடி 149 ஓட்டங்களைச் சேர்த்து வலுவான தொடக்கத்தைக் கொடுத்தனர். வில் யங் 8 ஓட்டங்களில் வெளியேற, அந்த அணியின் நட்சத்திர வீரர் கேன் வில்லியம்சன் தாம் ஏன் உலகத்தரம் வாய்ந்த வீரர் என்பதை நிரூபித்தார். இங்கிலாந்துப் பந்து வீச்சை அபாரமாக எதிர்கொண்ட வில்லியம்சன், 132 ஓட்டங்களை எடுத்தார். டரல் மிச்செல் 54 , டொம் ப்ளாண்டெல் 90 ஓட்டங்களைச் சேர்த்தனர். நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்சில் 483 ஓட்டங்களைக் குவித்தது. இதன் மூலம் இங்கிலாந்துக்கு 258 ஓட்டங்களை வெற்றி இலக்காக நியூசிலாந்து அணி நிர்ணயித்தது.

நான்காவது நாள் முடிவில் தனது இரண்டாவது இன்னிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 48 ஓட்டங்களோடு இருந்த இங்கிலாந்து அணியின் ஐந்தாவது நாள் ஆட்டம் ஆரம்பமாகிய உடனேயே பென் டக்கட் 33 ஓட்டங்களிலும், றொபின்சன் 2 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹரி புருக் ஓட்டமெதனையும் பெறாமல் டக் அவுட் ஆனார்.

ஒரு கட்டத்தில் 80 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து இங்கிலாந்து தடுமாறியபோது ஜோ ரூட் மற்றும் பென் ஸ்டோக்ஸ் இணைந்து 6 ஆவது விக்கெட்டுக்கு 121 ஓட்டங்களைச் சேர்த்து அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். வெற்றிக்கு 57 ஓட்டங்களே தேவைப்பட்ட நிலையில், நியூசிலாந்து வேகப்பந்துவீச்சாளர் வக்னர், அபாராமான எகிறும் பந்துகளை வீசி இங்கிலாந்து அணியின் விக்கெட்டுகளை சிதறடித்தார். ஸ்டோக்ஸ் 33 ஓட்டங்களிலும், ஜோ ரூட் 85 ஓட்டங்களோடும் வக்னர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

பென் போஃக்ஸ் 35, ஸ்டுவர்ட் ப்ரோட் 11 ஓட்டங்களை எடுத்த நிலையில், முக்கிய கட்டத்தில் ஆட்டமிழந்து வெளியேறினர். இங்கிலாந்து வெற்றிக்கு 7 ஓட்டங்களும், நியூசிலாந்து வெற்றிக்கு ஒரேயொரு விக்கெட்டும் தேவை என்ற கட்டத்தில் ஆட்டம் பரபரப்பின் உச்சககட்டத்திற்கே சென்றது.

வெற்றிக்கு 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், ஜேம்ஸ் அன்டர்சன் வக்னரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதன் மூலம் பாஃலோ ஒன் பெற்றும், ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி தொடரையும் சமன் செய்துள்ளது.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்தின் கேன் வில்லியம்சனும், தொடரின் நாயகனாக இங்கிலாந்தின் ஹரி புருக்கும் தெரிவாகினர்.

# லெஜன்ட்ஸ் லீக் தொடரில் ஐந்து இலங்கை வீரர்கள்



முன்னாள் கிரிக்கெட் வீரர்களின் பங்குபற்றுதலோடு கட்டாரில் நடைபெறவுள்ள லெஜன்ட்ஸ் லீக் கிரிக்கெட் மாஸ்டர்ஸ் 2023 தொடரில் களமிறங்க வுள்ள ஏசியா லயன்ஸ் அணியில் இலங்கை அணியின் முன்னாள் வீரர்கள் ஐவர் இடம்பெற்றுள்ளனர்.

உலகெங்கிலும் உள்ள முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்கள் கலந்துகொள்ளும் லெஜன்ட்ஸ் லீக் கிரிக்கெட் மாஸ்டர்ஸ் தொடரின் இரண்டாவது சீசன் மார்ச் 10ஆம் திகதி முதல் மார்ச் 20ஆம் திகதி வரை கட்டார் தலைநகர் டோஹாவில் உள்ள ஏசியன் டவர் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கட்டார் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடை பெறவுள்ள தொடரில் ஏசியா லயன்ஸ், இந்தியா மஹாரா ஜாஸ் மற்றும் வேர்ல்ட் ஜயண்ட்ஸ் ஆகிய 3 அணிகள் விளையாடவிருக்கின்றன.

கடந்த ஆண்டைப் போலவே இம்முறையும் லெஜன்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் இலங்கை கிரிக் கெட் அணியைச் சேர்ந்த 5 முன்னாள் வீரர்கள் ஏசியா லயன்ஸ் அணிக்காக ஆடவுள்ளனர். உபுல் தரங்க, திலகரட்ன டில்ஷான், திசர பெரேரா, டில்ஹார பெர்னான்டோ மற்றும் இசுரு உதான ஆகியோர் அந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இதனிடையே கடந்த ஆண்டு லெஜன்ட்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் இதே அணிக்காக விளையா டிய சனத் ஜயசூரிய, ரொமேஷ் களுவித்தாரன, சமிந்த வாஸ், முத்தையா முதளிதரன், நுவன் குலசேகர மற்றும் அஜந்த மெண்டிஸ் ஆகியோர் இம்முறை இடம்பெறவில்லை. ஏசியா லயன்ஸ் அணியில் இலங்கையின் முன்னாள் வீரர்கள் தவிர பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் முன்னாள் வீரர்களும் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஆண்டைப் போலவே இம்முறையும் ஏசியா லயன்ஸ் அணியின் தலைவராக பாகிஸ்தானின் முன்னாள் வீரர் மிஸ்பா உல் ஹக் செயல்படவுள்ளார்.

ஏசியா லயன்ஸ் அணி விபரம் –

உபுல் தரங்க, திலகரட்ன டில்ஷான், திசர பெரேரா, டில்ஹார பெர்னான்டோ, இசுரு உதான, சொஹைப் அக்தார், சஹீட் அப்ரிடி, மிஸ்பா உல் ஹக், அப்துல் ரசாக், அஸ்கார் ஆப்கான், பராஸ் கத்கா, ராஜின் சாலே, அப்துர் ரசாக்.

# கட்டார் ஓபின் டென்னிஸ் மெட்வடேவ் சம்பியன்!



கட்டார் ஓபின் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த முன்னணி வீரரான டானில் மெட்வடேவ் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

டோஹா நகரில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இங்கிலாந்து வீரர் அன்டி முரேயை, மெட்வடேவ் எதிர்கொண்டார். போட்டியின் ஆரம்பம் முதலே தனது ஆளுமையைக் காண்பித்த மெட்வடேவ், 6 – 4, 6 – 4 என்ற நேர் செட்களில் இலகுவான வெற்றியைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

# எனது முடிவுக்காக வருத்தப்படமாட்டேன்

## பென் ஸ்டோக்ஸ் தெரிவிப்பு

ஃபாலோ ஆன் ஆன நியூசிலாந்தை அணியை மீண்டும் பேட்டிங் செய்யச் சொன்னதற்காக வருத்தப்படமாட்டேன் என இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தைப் பரபரப்பான முறையில் வென்று வரலாறு படைத்தது நியூசிலாந்து அணி. ஃபாலோ ஓன் ஆன பிறகு டெஸ்டை வென்ற 4ஆவது அணி என்கிற சாதனையைப் படைத்ததுடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் வெற்றிநடை போட்டு வரும் இங்கிலாந்து அணியையும் வீழ்த்தி புரட்சி செய்துள்ளது.

இந்தத் தோல்வி பற்றி இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் தெரிவித்ததாவது –

நியூசிலாந்தை மீண்டும் துடுப்பெடுத்தாடச் செய்யும் விதமாக ஃபாலோ ஓனை கொடுத்த பிறகு எங்களுக்கான தோல்வியை நாங்கள்தான் உருவாக்க வேண்டும் என்கிற நிலை இருந்தது. இதற்கான காரணம் என்னவென்றால், நியூசிலாந்தின் முன்னணி துடுப்பாளர்களைக் கடந்த மூன்று இன்னிங்ஸிலும் எங்களுடைய பந்துவீச்சாளர்கள் வீழ்த்தினார்கள். நியூசிலாந்து அணி மிகச்சரியாக விளையாடினால் மட்டுமே எங்களை நெருக்கடிக்கு ஆளாக்க முடியும் என எண்ணினோம். நடப்பதை முன்பே அறிந்து தலைமை தாங்க முடியுமா?

கடைசி இன்னிங்ஸில் 250 ஓட்டங்களை விரட்டவேண்டும் என்பதை எண்ணி நாங்கள் அஞ்சியதே இல்லை. நியூசிலாந்து அணி சிறப்பாகத் துடுப்பாட்டம் செய்ததுடன் அருமையாகப் பந்துவீசி வெற்றியடைந்துள்ளார்கள். இப்போது என்னுடைய முடிவை எண்ணிப் பார்ப்பேனா என்றால் நிச்சயம் இல்லை. அந்த முடிவுக்காக நான் வருத்தப்பட மாட்டேன். நியூசிலாந்து அணி எங்களை விடவும் நன்றாக விளையாடியது – என்றார்.

# கோபமடைந்த ஸ்மித்



இந்திய அணியுடனான 2ஆவது டெஸ்டில் ஆட்டமிழந்த விதம் குறித்து தனது கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார் பிரபல ஆஸி. துடுப்பாளர் ஸ்டீவ் ஸ்மித்.

இந்தியாவில் 4 டெஸ்டுகளில் விளையாடும் ஆஸ்திரேலிய அணி, அடுத்ததாக 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும் பங்கேற்கிறது. டெஸ்ட் தொடரில் முதல் இரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்ற இந்திய அணி 2 0 என முன்னிலை வகிக்கிறது. 3ஆவது டெஸ்ட், இந்தூரில் நாளை தொடங்குகிறது.

டில்லி டெஸ்டில் 2ஆவது இன்னிங்ஸை ஆடிவந்த ஆஸ்திரேலியா, 3வது நாளன்று முதல் பகுதியிலேயே 113 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியின் துடுப்பாட்ட வரிசையை, இந்தியச் சுழற்பந்து வீச்சாளர் ரவீந்திர ஜடேஜா முற்றிலுமாகச் சிதைத்தார். அவருக்கு அஸ்வினும் துணை நிற்க, சுழலியே சுருண்டது ஆஸ்திரேலியா.

பின்னர் 114 ஓட்டங்களை நோக்கி விளையாடிய இந்தியா, 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து இலக்கை அடைந்து வெற்றி பெற்றது. இரு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 10 விக்கெட்டுகள் சாய்த்த ஜடேஜா ஆட்ட நாயகன் ஆனார்.

இந்தூரில் நாளை தொடங்கும் 3ஆவது டெஸ்டில் கம்மின்ஸுக்குப் பதிலாக ஆஸி. அணிக்குத் தலைமை தாங்குகிறார் ஸ்டீவ் ஸ்மித். இந்நிலையில் 2ஆவது டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் அஸ்வின் பந்தை ஸ்வீப் செய்ய முயன்று ஆட்டமிழந்தார் ஸ்மித்.

“நான் 95 டெஸ்டுகளில் (94) விளையாடியிருப்பேனா? ஆட்டமிழந்துவெளியேறும்போது,என்னநான்செய்துள்ளேன், ஏன் இப்படி ஆட்டமிழந்தேன் என எப்போதாவதுதான் நினைத்துள்ளேன். அன்றைய தினம் ஆட்டமிழந்த பிறகு நான் கோபமாக இருந்தேன். எனக்கான சிறந்த நேரமல்ல அது. அதிலிருந்து நான் கற்றுக்கொள்ள இருக்கிறது. நான் இன்னமும் கற்றுக்கொண்டுதான் இருக்கிறேன். நான் விளையாட நினைத்த ஷாட் அல்ல அது. அன்றைய தினம் நாங்கள் அவசரப்பட்டுவிட்டோம். நாங்கள் நிதானமாகச் சூழலை எதிர்கொள்ளவேண்டும். ஆபத்தை வரவழைக்கும் விதத்தில் விளையாடக்கூடாது.

ஆஸி. அணிக்கு தலைவராக இருக்கும்போது என்னுடைய திறமை முழுமையாக வெளிப்படும். இந்தியாவில் நிலவும் சூழலை நான் நன்கு அறிவேன். இது எனக்கு 2ஆவது சொந்த ஊர் போல. இந்தியாவில் நிறைய விளையாடியுள்ளேன். இந்த டெஸ்டை மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்” என்றார்.